# நீர்

# வளையங்கள்

சண்முகம் சிவலிங்கம்

தமிழியல்

**Neer Valaiyangal**

Poems in Tamil by Shanmugam Sivalingam
© Author
First Edition : November 1988
Published by : Tamiliyal, Madras.

Printed at : Mithila Achchagam,
5 Kutchery Lane, Madras 600 004.

Price : Rs. 16.00

* * *

லண்டனில் இயங்கிவரும்
தமிழ் அவைக்காற்று கலை கழகம்
அளித்துள்ள நிதி உதவியுடன்
இந்நூல் வெளிவருகிறது.

* * *

புத்தகம் கிடைக்குமிடம் :

க்ரியா, 268 ராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை 14

வயல், 5 கச்சேரி சந்து, மயிலாப்பூர்
சென்னை -4

இது

நல்லதம்பி சுந்தரராஜன்

(கோட்டைக்கல்லாறு)

ஞாபகார்த்தம்

## உள்ளடக்கம்


*எனது கவிதைகள்..........9*

*சசியும் அவரது கவிதைகளும்..........13*

*கறுத்தப் புள்ளிகள்..........27*

*அற்பங்கள்..........30*

*காற்றிடையே..........31*

*புதைத்து வருகிறோம்..........34*

*அவள் நினைவு..........36*

*நாங்கள் இரு தும்பிகள்..........37*

*ஆலம் இலைகள்..........39*

*சனங்கள்..........41*

*வாழ்வும் மரணமும்..........43*

*நண்டும் முள்முருக்கும்..........45*

*சந்தியிலே நிற்கிறேன்..........47*

*நீர் வ ளையங்கள்..........49*

*மென்மையின் தளைகளிலிருந்து..........53*

*ஒரு நகரின் முகமற்ற முகங்கள்..........55*

*துருவத் தரையின் வசந்தப் பூவுக்கு..........57*

*ஒரு பொழுதின் நிறைவுக்காக..........58*

*ஆதாம்கள் ஆயிரம்..........60*

*எகிப்தின் தெருக்களிலே..........66*

நிலவும் ஒரு வழிப்போக்கனும்..........70

மறுதலை..........73

வெறும் வரிகளும் ஒரு முள் இளவேனிலும்..........76

விஸ்வரூபங்கள்..........78

நத்தைச் சுகம்..........80

தவறிய பருவங்கள்..........82

ஒரு பிரியாவிடை..........84

மீண்டும் எழுந்திருக்கையில்..........86

ஒரு ஞாயிற்றுக் கிழமை..........87

மண்ணும் மனிதரும்..........95

வெள்ளிப்பூக்கள்..........99

ஆக்காண்டி..........102

பரவளைவுக்கோடு..........107

இருட்டுக் குரல்கள்..........115

வெளியார் வருகை..........117

மண்ணில் முளைக்கும் வால் நட்சத்திரம்..........122

மதுக்கடைக்குப் போகிறோம்..........127

71 ன் பின்னர்..........129

பாதிகள்..........130

சுயவார்ப்புகள்..........132

அழைப்பு..........138

இன்று இரவு..........136

பாடாத பாடல்கள்..........138

வெளிப்பு..........140

இனிப்புகளும் கசப்புகளும்..........142

இப்போது..........144

எமது பாடுகளின் நினைவாக..........145

பிள்ளைக்கறி..........147

காவல் அரண்கள்..........148

ஆனையிறவு முகாம்..........150

சரத்முத்தெட்டுவேகம்..........152

எல்லைகளில் ஒரு நள்ளிரவில்..........154

மணல் மேட்டுச் சரிவுகளில்..........156

சமாதானச் சாக்கடை
மரியாத உயிர்ச்சுவடும்..........158

விலகிச் செல்லும் மையங்களும்..........160

நான்காம் இரவு..........167

## எனது கவிதைகள்

எனது கவிதைகள் பற்றி நான் எதுவும் இந்த தொகுதியில் எழுதுவது அவசியமில்லை என்றே (இதை எழுதும்) இரண்டு நாட்களுக்கு முன்பு வரை எண்ணியிருந் தேன். உண்மையில் நண்பர் நுஃமானுக்கும் என் ஆழ்ந்த அன்புக்குரிய திரு ஆர்.பத்மநாப ஐயருக்கும் நன்றி தெரிவிக்கு முகமாக "வெளிச்சத்துக்கு வருதல்" என்னும் சில வரிகளை முகப்பு வெற்றிலையாக அமைத்திருந்தேன். ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு பரிதாபத்துக்குரிய என் நாட்டில் நடந்த சில சம்பவங்கள் என் முடிவை அடியோடு மாற்றிவிட்டன.

எனது நாட்டின் இலக்கிய வரலாற்றில் அறுபதாம் ஆண்டுகள் மிக முக்கியமானவை. எழுபதாம் ஆண்டுகள், குறிப்பாக எழுபத்திரெண்டுக்கு பிற்பட்ட தசாப்தப் பகுதி அறுபதுகளில் ஏற்பட்ட சில வளர்ச்சிப்போக்குகளை நிதானிப்பதாகவும், மறுகண்ணோட்டம் செலுத்துவதாகவும் அமைந்தது. எண்பதுகளில், 83 க்கு பிற்பட்ட காத்திரமான படைப்புகள் ஒரு திடீர் திருப்பம் பெற்றவைகளாக அமைந்தன. இந்தப் போக்குகள், இலங்கையின் பொதுத் தேசிய உணர்வோட்ட பரிணாமத்திலிருந்து, இன ஒடுக்கு முறையின் காரணமாக எழுச்சி பெற்ற தமிழ் தேசியவாத வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்டவை என்பது இன்று எல்லோரும் கிரகித்துக் கொள்ளக்கூடிய ஒன்று.

என்னுடைய முன்னுரைப் பிரச்சினை 83 க்கு பிற்பட்ட வளர்ச்சிப் போக்கால் ஏற்படுகிறது. முக்கியமாக 87 க்கு பிற்பட்ட இன்றைய நெருக்கடி நிலைமை தொடர் பானது. 87 க்கு பிற்பட்ட நெருக்கடி சிலவேளை 83 க்கும் 86

க்கும் இடைப்பட்ட நிலையிலிருந்து வேறுபடாததொரு தோற்றம் காட்டுவதால் மொத்தமாக இன்று 83 க்கு பிற்பட்ட தேசிய பிராந்திய நிகழ்வுகளைப் பொறுத்தமட்டில் 'ஆமை போல் ஐந்தடக்கி' ஊமையாக வேண்டியுள்ளது. 1970 ல் எழுதப்பட்டு எப்படியும் 83 க்கு முன்பு யேசுராசாவின் 'அலை'யில் வெளிவந்திருக்கக்கூடிய எனது 'வெளியார் வருகை' இதில் சேர்த்துக்கொள்ளப்படுவது பற்றி சற்று முன்பு வரை நான் மறுபரிசீலனை செய்ய வேண்டியிருந்தது. உண்மையான கருத்துச் சுதந்திரம் பெயரளவில் கூட இல்லாத இந்த பயங்கரமான நாட்களில், எனது 'வெளியார் வருகை' 1970 ம் ஆண்டின் ஓர் அதிகாலைக் கனவு என்பதை இன்று யாராவது நம்ப மறுத்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. 87 க்கு முன்பு 'மரணத்துள் வாழ்வோம்' தொகுத்த யேசுராசா முதலியோர் எனது 'வெளியார் வருகை' யின் கடைசிச் சொற்கள் இரண்டையும் தமது தொகுதிக்கு ஏற்ற நாமமாக தெரிவு செய்திருந்தாலும் அந்தக் கவிதையை அவர்கள் அதன் கால அடைவு காரணமாக அன்று புறக் கணிக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் இன்று அது அவர் களால் முடியுமா என்பது சந்தேகம். அத்தகைய ஒரு மயக்க நிலை இன்று உருவாகியுள்ளது.

இந்த நிலையில் வாசகர்கள், குறிப்பாக தமிழ் நாட்டு வாசகர்கள், இந்தத் தொகுதியை இலங்கைத் தமிழ் தேசியப் போராட்டத்துடன் அவ்வளவு சம்பந்தப்படாத 83 க்கு முந்திய கவிதைகளாகவே கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். ஆமை போல் ஐந்தடக்கிய அந்த ஊமைக் குரல்கள் பின்னொரு நாளில் வெளிவரக்கூடும். 83 க்கும் 87 க்கும் பிற்பட்ட கவிதைகள் ஒரு கால நிறைவுக்காக இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இதுதான் நான் முக்கியமாகச் சொல்ல விரும்பியது. வேறென்ன சொல்வது? எல்லோரும் சொல்வது போல் நானும் சொல்லலாம்: இந்த கவிதைகளில் இன்பமும் உண்டு, துன்பமும் உண்டு, வேதனையும் விரக்தி களும் உண்டு, அவை தந்த வெளிச்சங்களும் உண்டு. இந்த

வெளிச்சங்களைத்தான் நான் முக்கியமானதாகக் கருது கிறேன். இன்பத்தினூடும் துன்பத்தினூடும், வேதனையி னூடும் விரக்தியினூடும் வரும் எனது வெளிச்சத்தைக் காணுங்கள் என்பதுதான் எனது கோரிக்கை. வெளிச்சம் ஒன்றைத் தருவதுதான் ஒரு கலைப்படைப்பின் வாழ்தலுக் கான நியாயம் என நான் கருதுகிறேன். எனது, 'காற்றிடையே' வில் என்ன வெளிச்சத்தைக் காண்கிறீர்கள், எனது 'நண்டும் முள்முருக்கு'வில் என்ன வெளிச்சத்தைக் காண்பீர்கள் என்ப தெல்லாம் எனக்கு முக்கியம். இருந் தாலும், இருத்தலுக்குப் பிரக்ஞையாய் இருத்தலும் கூட முக்கியமான வெளிச்சங்கள் என்பது வெளிச்சமானால் சரி. எனது 'சனங்கள்'இல்கூட வெளிச்சத்தைக் காணாதவர்கள் முன்பு இருந்தார்கள். இப்போது எப்படியோ? எனது கவிதைகளில் சிலது கருக லானவை எனச் சொல்பவர்கள் பலர். அவர்களை நோக்கிய கறுத்தப் புள்ளிகளை எழுதி னேன். கறுத்தப் புள்ளிகள் அவர்களுக்கு இன்னும் கருகலாகத் தெரியக்கூடும். 'மென்மையின் தளைகள்' சற்றுக் கூடுதலான உள் இடை வெளிகளை உடையவை என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்த வினாடிகளின் அழுத்தமும் அமுக்கமும், தொலைவும் தொலைவுச் சுருக்கமும் அப்படி. உள் இடைவெளிகளின் ஊக்கமும் உள்ளுணர்வுமே சிலவேளை வாசகனின் வெளிச்சமாய் அமையக்கூடும்.

இந்தத் தொகுதி வருவதற்கு முக்கிய காரணமாய் அமைந்தவர் (என் தொடர்புகள் சம்பந்தப்பட்ட மட்டில்) என் பெருமதிப்புக்குரிய திரு பத்மநாப ஐயர் அவர்கள். இலங்கைத் தமிழ்நூல் வெளியீட்டில் அவரும் யேசுராசாவும் ஆற்றியுள்ள பணி கணிசமானது. எனக்கும் ஐயருக்கு மிடையில் ஒரு பாலமாய் அமைந்த நண்பர் நுஃமான் என்னுடைய கவிதைகளின் உள்ளும் புறமுமான உணர்வு களில் பல இடங்களில் நுழைகிறார். எனது விலகிச் செல்லும் மையங்களில் அவரும் ஒன்று. இந்தத் தொகுதிக்கு ஒரு முன்னுரை எழுதி உதவுவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

இருவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தக் கவிதைகளில் சில ஜீவாவின் 'மல்லிகை' யிலும், சேரனின் ஆதரவில் 'புதுசு'விலும், யேசுராசாவின் 'அலை'யிலும், நஃமானும் நானும் வெளியிட்ட 'கவிஞன்' இலும் வெளிவந்தன. இவர்களுக்கும், மற்றும் இதனை வெளியிட முன்வந்த தமிழியல் பதிப்பகத்தாருக்கும் இதனை நல்ல முறையில் அச்சிடும் பணியில் ஈடுபட்ட மிதிலா அச்சகத்தாருக்கும் எனது நன்றிகள் உரியன.

'அமலபதி'
பாண்டிருப்பு — சண்முகம் சிவலிங்கம்
கல்முனை (இலங்கை)

# சசியும் அவரது கவிதைகளும்

*சமகாலத் தமிழ்க் கவிதையில் அதிக பரிச்சயமும், ஆழ்ந்த கலை உணர்வும் உள்ள வாசகனுக்கும் சண்முகம் சிவலிங்கத்தின் (சசி) கவிதைகள், அவை பற்றி நான் சொல்வதைவிட அதிகமாகவே சொல்ல வல்லன. என்றாலும் சசிக்கும் எனக்கும் இடையேயுள்ள தொடர்பின் காரணமாகவும் நீண்ட காலமாக நானே அவரது முதல் வாசகனாக இருந்தவன் என்பதனாலும் அவரைப் பற்றியும் அவரது கவிதைகள் பற்றியும் ஓர் அறிமுகக் குறிப்பாக சிலவற்றைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.*

*சசியே சொல்வது போன்று அவரது கவிதைகளில் "உள்ளும் புறமுமான உணர்வுகளில் பல இடங்களில் நுழைந்திருப்பவன்" நான். நீர் வளையங்களில் அவர் விளிக்கும் நண்பன் நான்தான். நாங்கள் இரு தும்பிகளில் வரும் இரண்டாவது தும்பியும் நான்தான். பரவளைவுக் கோட்டிலும் நான் இருக்கிறேன். விலகிச் செல்லும் மையங்கள் என்னை நோக்கியதுதான். அந்த அளவுக்கு சசியும் நானும் நெருங்கி இருந்திருக்கிறோம். அவர் எனது நண்பர். என்னைவிட ஐந்து வயது அதிகமான – எனினும் தோற்றத்தில் என்னைவிட ஐந்து வயதேனும் குறைவான நண்பர். அறுபதுகளின் பின் அரைவாசியில் நாங்கள் சந்தித்தோம். கடந்த இருபதுக்கும் அதிகமான ஆண்டுகளில் கவிதை எங்கள் நட்பை வளர்த்திருக்கிறது. 1969 ல் நாங்கள் இருவரும் சேர்ந்து கவிஞன் என்ற காலாண்டு இதழை வெளியிட்டோம். அதன் வெளியீட்டில் என்னைவிட அதிக பங்கு வகித்தவர் சசி. தன்முனைப்பு அற்ற தன்னை ஒளித்துக்*

*கொள்ளும் அவரது சுபாவத்தின் காரணமாக அதன் தொகுப்பாளராக எனது பெயரே இடம்பெற நேர்ந்தது. அவரது ஆரம்ப காலத்தில் எனது பாதிப்பு தன்னில் இருப்பதாக அவரே கூறும்போதிலும் எனது ஆதர்சமாகவும் நான் விரும்பி வியந்து படிக்கும் கவிஞராகவும் அவர் விரைவாகவே வளர்ந்துவிட்டார். (எனினும் கவிதையில் எனது பாணி வேறாகவும் அவரது பாணி வேறாகவுமே இருந்து வருகின்றது. எங்கள் தனித்துவம் அப்படி.) இன்று தனது விலகிச் செல்லும் மையங்களில் என்னையும் ஒன்றாக அவர் கருதிய போதிலும் அது ஒரு பிரமைதான். என்னைப் பொறுத்தவரை இன்றும் அவர் என் நெருங்கிய நண்பர்தான். நான் மனம் நெகிழ்ந்து நினைவு கூறும் மிகச் சில நண்பர் களுள் அவரும் ஒருவர்.*

*சண்முகம் சிவலிங்கம் கிழக்கிலங்கையில் பாண்டிருப்பு என்னும் கிராமத்தில் 1939 ல் பிறந்தவர். அவர் பிறந்தது ஒரு வைதீக இந்துக் குடும்பத்தில். அவர் பெயரே அதைச் சொல்லும். ஆனால் இளம் வயதில் - பாடசாலைக் காலத்திலேயே-கத்தோலிக்கராக மதம் மாறியவர். (விலகிச் செல்லும் மையங்களில் அவர் குறிப்பிடும், பதினொரு வயதில் அவரை ஊடுருவிய தாடிவாலாவின் செல்வாக்கு அதற்குக் காரணமாக இருக்கலாம்.) அதன் பொருட்டு வீட்டில் அடி உடைகள் வாங்கியவர். ஒரு கத்தோலிக்க குடும்பத்திலேயே திருமணம் செய்து கொண்டவர். ஆளு ஆண் பிள்ளைகளின் தகப்பன். அவரது கிராமத்தில் ஸ்ரீபன் (மாஸ்டர்) என்ற கிறிஸ்துவப் பெயராலேயே இன்றைக்கும் பலர் அவரை அறிந்துவைத்திருக்கின்றனர். கேரளத்தில் படித்து விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றவர் அவர். கடந்த 25 ஆண்டுகளாக விஞ்ஞான ஆசிரியராகத் தொழில் புரிபவர். தத்துவார்த்தரீதியில் ஒரு பொருள்முதல்வாதியாகப் பரிணமித்திருக்கிறார். அவரது கவிதைகள் பலவற்றின் – குறிப்பாக, ஒரு ஞாயிற்றுக்கிழமை, ஆதாம்கள் ஆயிரம்,*

எமது பாடுகளின் நினைவாக போன்றவற்றின் அனுபவ அடிப்படைகளைப் புரிந்துகொள்ளவும் அவரது கவிதை களில் பரவிக் காணப்படும் விஞ்ஞானக் குறியீடுகளின் பின்னணியை விளங்கிக்கொள்ளவும் அவரைப் பற்றிய இந்தச் சிறுகுறிப்பு உதவக்கூடும்.

## 2

தற்காலத் தமிழ்க் கவிதையில் சற்றுப் பரிச்சயம் உடையவர்கள் சசியின் கவிதைகள் வித்தியாசமாக இருப் பதை உணர்ந்து கொள்வர். அவரைப்போல் பிறிதொரு கவிஞரை, அவருடையதைப்போல் பிறிதொருவருடைய கவிதையை அடையாளம் காட்டுவது கடினம். அவருடைய தனித்துவம் அப்படி. தனித்துவமான இங்கைத் தமிழ்க் கவிதை மரபின் ஒரு தீவிர வளர்ச்சி நிலையை – பாய்ச்சலை இவரது கவிதைகளில் காணமுடிகிறது.

அறுபதுகளின் பின்அரைவாசியில்தான் சசி கவிதை எழுதத் தொடங்கினார். அவர் ஆரம்பத்தில் எழுதிய சில கவிதைகளில் சற்றுச் செந்நெறிப் பாங்கான (Classical) நடையினைக் காணமுடியும். ‘கண்படுவரை நீள் கரைவாகு வட்டை’ எனத் தொடங்கும் கவிதை அவ்வகையில் நான் படித்த அவரது முதலாவது கவிதை என்று நினைக்கிறேன். அது இத்தொகுப்பில் இடம்பெறவில்லை. இத்தொகுப்பில் உள்ள அவள் நினைவிலும் இதன் சாயலைப் பார்க்கலாம். ‘இளைய சிவப்பரும்புகளில் இலை மறையும் புது ரோசா’, ‘பளபளென்ற சிவப்பு நிறப் பரல் கல்லில் நீரோடும்.’ இதன் மொழிதான் செந்நெறிப் பாங்கானதாக இருக்கின்றதே தவிர இக்கவிதை – இதன் அமைப்பு – தமிழுக்கு மிகவும் புதியது.

செந்நெறிப் பாங்கு சசி கவிதைகளின் ஒரு பண்பல்ல. இத்தொகுதியில் அத்தகைய கவிதைகள் அவள்

நினைவு ஒன்றுதான். அதுகூட முற்றிலும் செந்நெறிப்பாங் கானது அல்ல. பொதுவாக அவரது மொழி மிகச் சாதாரண மான இன்றைய நடைமுறைத் தமிழ்தான்.

“நீ வந்திருக்கிறாய்

நான் எழுதவேண்டும்

ஏன்?

நீயே எனது மையமா?”

என்று தொடங்குகிறது ஒரு கவிதை.

“அற்ப நிகழ்வும்

அர்த்த மற்றதும்

என்னுடன் வருக”

என்று தொடங்குகிறது பிறிதொரு கவிதை.

“எல்லாம் முடிந்தது

இனி என்ன, நாம் நடப்போம்”

என்று தெடங்குகின்றது வேறொரு கவிதை.

“சந்ததியில் நிற்கிறேன்

பகல் சாய்கிறது”

என்பது இன்னொரு கவிதையின் தொடக்கம், இப்படி பெரும்பாலும் சாதாரண மொழிதான் (Plain language). ஆனால் இந்தச் சாதாரண மொழியில் அசாதாரண உணர்வு களை எழுப்பி அந்த மொழிக்கு ஒரு அசாதாரணத் தன்மையை, ஒரு கனதியை, வேறு ஒரு பரிமாணத்தை கொடுப்பன அவரது கவிதைகள். இது மகாகவி, நீலாவணன், முருகையன் போன்றோர் மூலம் ஈழத்தில் வளர்ச்சியடைந்த ஒரு கவிதை மரபின் தொடர்ச்சி. சண்முகம்

சிவலிங்கம் இம்மரபின் உண்மையான வாரிசுகளுள் ஒருவர். அதற்கு ஒரு புதிய வளத்தைக் கொடுத்தவர். ஈழத்தில் வளர்ந்த இம்மரபு தமிழகத்தில் வளர்ந்த பாரதிதாசன் பரம்பரையினரின் சத்தற்ற எளிய செய்யுள் மரபில் இருந்து வேறானது. இதற்கு எதிராக 'எழுத்து' வளர்த்த புரியாத இருண்மைக் கவி மரபில் இருந்தும் வேறானது. பிற்காலத்தில் வானம்பாடிக் குழுவினர் வளர்த்த ஜனரஞ்சகமான அலங் கார வசன மரபில் இருந்தும் வேறானது. இந்தக் கவிதைகள் முதல் பார்வையில் மிகச் சாதாரணமாக – Plain ஆக – தெரியக்கூடும். ஆனால் இவற்றைப் போலியாகப் பிரதி பண்ண முடியாது. இவை எளிமையாகத் தோன்றினாலும் இது ஏமாற்றும் எளிமை. இதை உண்மையான கவிதையின் ஒரு லட்சணமாகவும் சொல்லலாம்.

3

தற்காலத் தமிழ்க்கவிதைபற்றிப் பேசுபவர்கள் மரபுக் கவிதை என்ற இருமைமுரண்பற்றி இன்னும் பேசிக் கொண்டுதான் இருக்கின்றனர். சசிகூட புதுக்கவிதை, அகலித்த புதுக்கவிதை பற்றியெல்லாம் பேசியிருக்கிறார். என்னைப் பொறுத்தவரை இந்த இருமை முரண் இப்போது அபத்தமானதாகவே தோன்றுகிறது. இந்த இருமைமுரணின் அடிப்படை என்ன? வேறு எதைச் சொன்னாலும் சாராம் சத்தில் யாப்பும் யப்பின்மையும்தான். யாப்பில் எழுதுவது மரபுக்கவிதை. யாப்பை மீறி எழுதுவது புதுக்கவிதை. புதுக் கவிதையாளர்கள் மரபுக்கவிதையை ஒரு பத்தாம் பசலி யாகவே நோக்குகின்றனர். மரபுக்கவிஞர்கள் புதுக் கவிதையை ஒரு சவளைக் குழைந்தையாகவே பார்க்

கின்றனர். இன்றுகூட இந்த நோக்கு, கவிதை பற்றிய நமது விமர்சனப் பார்வையைப் பெரிதும் பாதிக்கவே செய்கின்றது.

சரி. சசி ஒரு மரபுக் கவிஞரா? புதுக் கவிஞரா? இந்தத் தொகுப்பில் உள்ளசுமார் அரைவாசிக் கவிதைகள் சுத்தமான யாப்பில் – வெண்பா, அகவல், விருத்தம் போன்ற செய்யுள் வடிவங்களில் – அமைந்தவை. ஏனைய கவிதை களும் பெரிதும் "யாப்பு இடையிட்டவை" தான். இதே காரணத்துக்காக சசி யாப்பை (பத்தாம் பசலித்தனமாகக் கையாளும் மரபுக் கவிஞர்களுள் ஒருவராகிவிட மாட்டார். யாப்பில் பரிச்சயமில்லாதவர்களுக்கு சசியும் யாப்பை நிராகரித்து கவிதை எழுதும் ஒரு புதுக் கவிதைக்காரர்தான். என்னைப் பொறுத்தவரை சசி இரண்டும் இல்லை, அவர் ஒரு கவிஞர். நல்ல கவிஞர். மரபுவழிச் சிந்தனை முறையில் இருந்தும், வெளிப்பாட்டு முறையில் இருந்தும் விலகி, நவீன வாழ்வின் நெருக்கடிகளை நவீன முறையில் வெளிப் படுத்தும் ஒரு நவீன கவிஞர்.

யாப்பிலே எந்த அளவுக்கு மோசமான கவிதைகள் உள்ளனவோ அந்த அளவுக்கு – சிலவேளை அதைவிட அதிகமாக – யாப்பை மீறி, வசனத்தில் எழுதப்பட்டவற்றிலும் மோசமானவை உண்டு. ஆகவே யாப்பு அல்லது யாப்பின் மைக்கு தானே ஒரு கவித்துவத் தகைமை இல்லை. செய்யுளும் வசனமும் கவிதைக்கான ஊடகங்கள் (Medium) மட்டும்தான். ஊடகம், தானே கவிதையாவதில்லை. அது கவிதையைத் தாங்கி நிற்கும் சாதனம்; அவ்வளவுதான். கவிதை என்பது கவிதைப் பொருளும், பொருளின் வெளிப் பாட்டுமுறையும் இணைந்த ஒன்று. வெளிப்பாட்டு முறைதான் கவிதைப் பொருளுக்கு ஒரு கவித்துவத் தன்மையைக் கொடுக்கின்றதே தவிர செய்யுள் அல்லது வசனம் என்ற ஊடகம் அல்ல.

## *4*

*இத்தொகுப்பில் சண்முகம் சிவலிங்கத்தின் 54 கவிதைகள் உள்ளன. இக்கவிதைகள் 1967 முதல் 1988 வரையுள்ள கடந்த 22 ஆண்டுகாலத்தில் எழுதப்பட்டவை. இந்த இரண்டு தசாப்தங்களில் கவிஞருக்குள்ளும் கவிஞருக்கு வெளியே சமூகத்திலும் ஏற்பட்ட வளர்ச்சிகளை, மாற்றங்களை இந்தக் கவிதைகளில் நம்மால் இனம்காண முடிகிறது.*

*1960 கள் ஈழத்து இலக்கிய வரலாற்றிலே முற்போக்கு இலக்கியக் கோட்பாடு ஆதிக்கம் செலுத்திய காலம். 70களிலும் இதன் தொடர்ச்சி இருந்தது. இது அன்றைய சமூக, அரசியல் நிலைமைகளின் இலக்கிய வெளிப்பாடு. சமூக முரண்பாடுகள், வர்க்கப் போராட்டம், சமூக மாற்றம், புரட்சி சோசலிசம் என்பது எமது இலக்கியத்தின் உள்ளீடாக இருந்த காலம் அது. இக்காலத்தில் இதற்கு எதிரான, இதிலிருந்து விலகிய போக்குகள் இருந்தன. எனினும் இலக்கியத்தில் இதுவே ஆதிக்கப் போக்கு எனலாம். இக்கால கட்டத்தில் எழுதப்பட்ட சசியின் பெரும்பாலான கவிதைகள் இப்போக்கினைப் பிரதிபலிக்கின்றன. சமூகப் பிரக்ஞையும், புரட்சிகர அரசியல் நோக்கும் அவற்றின் உள்ளூடாக உள்ளன. புதைத்து வருகிறோம், ஆலம் இலைகள், சனங்கள், சந்தியிலே நிற்கிறேன், எகிப்தின் தெருக்களிலே, ஒரு ஞாயிற்றுக்கிழமை, ஆதாம்கள் ஆயிரம், ஆக்காண்டி, இருட்டுக் குரல்கள், வெளியார் வருகை, மண்ணில் முளைக்கும் வால் நட்சத்திரம் போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். இக்கால கட்டத்தில் இங்கு பெருமளவில் எழுதப்பட்ட கட்டுரைப் பாங்கான, கோஷ நடை சார்ந்த படைப்புகளில் இருந்து சசியின் கவிதைகள் அவற்றின் அழகியல் வீச்சிலும் ஆழத்திலும்*

எவ்வளவோ உயரத்தில் இருப்பதை ஒரு நல்ல வாசகன் எளிதில் கண்டுகொள்வான்.

1970 களின் பிற்பகுதியில் இருந்து குறிப்பாக 1977 க்குப் பிந்திய கடந்த பத்து ஆண்டுகளில் ஈழத்துத் தமிழ்க் கவிதையின் உள்ளீடு பெரிதும் மாறியிருக்கின்றது. கடந்த பல தசாப்தங்களில் சிங்கள பௌத்த பெருந்தேசியா வாதத்தின் இன ஒதுக்கல் நடைமுறைகளின் விளைவாக வளர்ச்சியடைந்த தமிழ்த்தேசியவாதம் இக்காலப் பகுதியி லேயே ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்ட வடிவத்தை எடுத்தது. இராணுவ ஒடுக்குமுறையும், ஆயுதப் போராட்டமும் ஏற்படுத்திய சமூக விளைவுகளின் எதிரொலி களே கடந்த பத்தாண்டுகளில் இலங்கைத் தமிழ்க் கவிதை யின் பிரதான பொருளாகியது. இத்தகைய கவிதைகளைக் கொண்ட பல தொகுப்புக்கள் சமீபத்தில் வெளிவந்துள்ளன. சேரன், ஜெயபாலன் போன்ற சில நல்ல கவிஞர்களை இக்காலகட்டம் உருவாக்கியுள்ளது. 1980 களில் சசியும் இக்காலகட்டத்தின் உணர்வுகளை தன் பல கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். அத்தகைய 12 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இன்றைய வாழ் நிலையின் குரூரமான பல அம்சங்களை அவை வெளிப் படுத்துகின்றன. குறிப்பாக, பாடாத பாடல்கள், இப்போது, பிள்ளைக்கறி, ஆகியவை இன்றைய வாழ்நிலையின் குரூரம் பற்றிய மனதை உறுத்தும் படிமங்களைக் கொண்டுள்ள வீச்சான கவிதைகளாகும். இத்தகைய தாக்கமான இன்னும் பல கவிதைகளை சசி இத்தொகுப்பில் சேர்ந்துக் கொள்ள வில்லை. சசியே சொல்வதுபோல் “உண்மையான கருத்துச் சுதந்திரம் பெயரளவில்கூட இல்லாத இந்தப் பயங்கரமான நாட்களில் ஆமை போல் ஐந்தடங்கி ஊமையாக” இருக்க நிர்ப்பந்திக்கும் உள்ளச்சமே இதற்குக் காரணமாகும்.

## 5

கவிதை கவிஞனின் சமூக, அரசியல் பிரக்ஞையின் வெளிப்பாட்டுச் சாதனம் மட்டுமல்ல; அது அவனது முழுமையான உணர்வுலகையும் தழுவி நிற்பது. மொத்த மான வாழ்க்கை அனுபவத்தின் ஒரு வெளிப்பாட்டுச் சாதனம் அது. இரத்தமும் சதையும் உள்ள எல்லா மனிதர் களையும் போலவே கவிஞனும் பல்வேறு வகையான வாழ்க்கை அனுபவங்களுக்கு உள்ளாகின்றான். அதனா லேயே 'எகிப்தின் தெருக்களிலே' எழுதிய ஒரு கவிஞனால் 'இன்று இரவு' எழுதுவதும் சாத்தியமாகின்றது. 'நண்டும் முள்முருக்கும்' எழுதிய ஒரு கவிஞனால் 'நத்தைச் சுகம்' எழுதுவதும் சாத்தியமாகின்றது. இது கவிஞன் மனிதனாக இருப்பதன் அடையாளம். அவன்தன் இருத்தலுக்குப் பிரக்ஞையாக இருப்பதன் அடையாளம். ஆனால் நமது பெரும்பாலான கவிஞர்களைப் பொறுத்தவரை கவிதை இத்தகைய ஒன்று அல்ல. பலருக்கு அது சமூக மாற்றத்துக் கான ஒரு கருவி மட்டும்தான். சமூக, அரசியல் பிரச்சினை களைச் சொல்வதற்கு மட்டுமே அவர்கள் கவிதையைப் பயன்படுத்துகின்றனர்; பயன்படுத்த வேண்டும் என்கின்றனர். வேறு பலருக்குக் கவிதை, வடிவம் சார்ந்த ஒரு பரிசோதனைக் கருவிதான். எதிர்க் கவிதை, படிமக் கவிதை, ஹைக்கூக் கவிதை என எழுதி, தாங்களே இவற்றை தமிழில் முதலில் அறிமுகப்படுத்தியதாகவும் சுயதிருப்தி உறுவர். இவர்களைப் பொறுத்தவரை கவிதை மூளை சார்ந்தது. தங்கள் கெட்டித்தனத்தைக் காட்டும் ஒரு வித்தை. தங்கள் சுயத்தின் குரல் அல்ல. இவர்கள் எல்லாருமே தங்கள் சுயத்தின் பெரும் பகுதியை மறைத்துக்கொண்டு தங்களுக்குச் சமூக அங்கீகாரம் பெற்றுத் தரக்கூடிய ஒரு சிறு பகுதியை மட்டும் கவிதைக்குள் கொண்டு வருபவர்கள். அந்த வகையில் ஒற்றைப் பரிமாணிகள்.

சண்முகம் சிவலிங்கம் இவர்களுள் ஒருவரல்ல. அவர் தன் சுயத்தை முழுமையாக வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதை விரும்பும் ஒரு கவிஞர். "இருத்தலும் இருத்தலுக்குப் பிரக்ஞையாய் இருந்ததாலும்" முக்கியமானது என்று கருதுபவர். தனது மூல விக்கிரகத்தை நாம் காண வேண்டும் என்பதற்காக, அதில் நமது மூல விக்கிரகத்தையும் தரிசிக்கவேண்டும் என்பதற்காக – தன்னைத் திரைநீக்கிக் காட்டுகிறார் அவர். எல்லா நல்ல கவிஞர்களினதையும் போல அவரது கவிதையும் அவரது முகமாக இருக்கிறது. அவரில் இருந்து பிரிக்க முடியாத ஒன்றாக அமைகின்றது. அவரது உணர்வுகளையெல்லாம் பிரதிபலிக்கின்றது. அவரது மன அமைப்பின் வெவ்வேறு பரிமாணங்களை அவரது கவிதைகள் மூலம் நாம் காண்கின்றோம். அவரது சமூக, அரசியல் கவிதைகள் அவரின் ஒரு பக்கத்தைக் காட்டுகின்றன என்றால், அவரது தன்னிலைக் கவிதைகள் (Personal Poems) அவரின் வேறொரு பக்கத்தைக் காட்டுகின்றன. அவரது கவிதைகளில் கணிசமானவை அவரைப் பற்றிய கவிதைகள்தான்.

சரியாக இருபது ஆண்டுகளுக்கு முன்பு சசி எழுதிய கவிதை நீர்வளையங்கள். இது அவரது முக்கியமான தன்நிலைக் கவிதைகளுள் ஒன்று. அவரின் மனக் குளத்தில் வீசப்பட்ட ஒரு கல் எழுப்பும் நீர்வளையங்களாக உணர்வலைகளாக – அமைகிறது கவிதை. மென் உணர்வுகளும் இலட்சியங்களும் நிறைந்த 29 வயது இளம் கவிஞனின் இதயக் குரலாக அது அமைந்துள்ளது. 'ஏகமும் தாம் என்று எண்ணுபவர்களுக்கு' எதிர்வினையுமாகும் அது.

'எச்சிறிய புல்லும்

அதன் இயல்பினிலே முழுமை

இடுகாட்டில் முளைக்கின்ற கழனியும்

ஓர் அருமை' என்பது கவிஞனின் தரிசனம்.

'நீர்வளையங்கள்' இத்தொகுப்பின் தலைப்பாகவும் இருப்பது இதற்கு ஒரு குறியீட்டுத் தன்மையையும் தருகின்றது. ஒவ்வொரு கவிதையும் வெளித் தாக்கத்தினால் கவிஞனின் மனக் குளத்தில் எழும் நீர்வளையங்கள் தான் என்பதை இது குறித்து நிற்கிறதுபோலும்.

1977க்குப் பிந்திய பத்தாண்டுகள் சசியின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடிகள் மிகுந்த காலம். விரக்தியும், சோர்வும், நிராசையும் அவரை ஆட்கொண்ட காலம் இது. அவரது சொந்த மனமுறிவுகள் இக்காலத்தில் எழுதப்பட்ட பல கவிதைகளில் பதிவாகியுள்ளன. நிலவும் ஒரு வழிப் போக்கனும், மறுதலை, வெறும் வரிகளும் ஒரு முன்இள வேனிலும், நத்தைச் சுகம், தவறிய பருவங்கள், ஒரு பிரியாவிடை, மீண்டும் எழுந்திருக்கையில், மரியாத உயிர்ச் சுவடும் விலகிச் செல்லும் மையங்களும் முலியவை இத்தகையன. சிலவேளை நிராசையை ஒரு வாழ்வியல் தத்துவமாகக் காணவும் இவர் தூண்டடப்பட்டுள்ளார். மதுதலையில் இந்த நோக்கு கூர்மையாக வெளிப்படுகினற்து. சிலவேளை இவர் தன்னை அளவு மீறி நசித்துத் துன்புறுத்து கிறார் என்று தோன்றுகிறது. மறுதலை, வெறும் வரிகளும் ஒரு முன்இளவேனிலும், ஒரு பிரியாவிடை, மீண்டும் எழுந்திருக்கையில், விலகிச் செல்லம் மையங்கள் போன்ற வற்றில் இதுவே நிகழ்ந் துள்ளது. சுய துன்புறுத்தலின் சாயலை நான் இவற்றில் காண்கின்றேன். 'நான் அது அல்ல, அது அல்ல, அது என்னில் உள்ளதல்ல' என தன்னையே நிராகரித்தலும், தன்னை ஒரு living fossile ஆக, xiphosuridae ஆக காண்பதும் என்னைப் பொறுத்தவரை அவரைப் பற்றி அவருக்குள் நிகழும் ஒரு பொய்த்தோற்றமாக (illusion) ஒரு

திரிபுக்காட்சியாகவே இருப்பினும் அதன் மூலம் நமக்குச் சில நல்ல கவிதைகள் கிடைத்துள்ளன. மறுதலை, விலகிச் செல்லும் மையங்கள் என்பன தமிழில் மிகவும் வித்தியாசமான கவிதைகள்தான்.

## 6

தற்காலத் தமிழில் சசி ஒரு வித்தியாசமான, தனித்துவமான கவிஞர் என்று ஏற்கனவே சொன்னேன். இவர் மூலம் நவீன தமிழ்க் கவிதை சில சிகரங்களை எட்டியிருக் கிறது என்பதை இத்தொகுப்பைப் படிப்பவர்கள் காண் பார்கள். சந்தியிலே நிற்கிறேன், மண்ணும் மனிதரும், ஆக்காண்டி, பரவளைவுக்கோடு, மென்மையின் தளைகளி லிருந்து, ஆதாம்கள் ஆயிரம், மறுதலை, மரியாத உயிர்ச் சுவடும் விலகிச் செல்லும் மையங்களும், வெளியார் வருகை என்பன எனக்கு சில சிகரங்களாகத் தெரிகின்றன. வேறு சிலருக்கு வேறு சில சிகரங்கள் தெரியலாம். ஆனால் அற்பம் என்று ஒதுக்கக் கூடியவை இந்தத் தொகுப்பிலே யாருக்கும் அதிகம் கிடைக்காது என்றே சொல்வேன். இப்போது திரும்பிப் பார்க்கையில் சில கவிதைகள், உதாரணத்துக்கு, ஒரு ஞாயிற்றுக்கிழமை இன்னும் சற்று செறிவாக இறுக்க மாக அமைந்திருக்கலாம் என்று தோன்றினாலும் 'நான்காம் இரவு' தவிர மற்ற கவிதைகள் எல்லாவற்றிலுமே சசியின் முத்திரை பளிச்சிடவே செய்கின்றது.

சிவலிங்கம் தன் கவிதைகள் பற்றி ஒருபோதும் பெருமைப் பட்டுக் கொண்டவர் அல்ல. இத்தொகுப்பில் உள்ளவற்றள் சுமார் மூன்றில் ஒரு பங்குக் கவிதைகள்தான் இதுவரை பத்திரிகைகளில் பிரசுரமாகி இருக்கின்றன. அவற்றைக்கூட கவனமாகச் சேர்த்து வைத்துப் பேணும்

*பழக்கம் அவரிடம் இல்லை. எழுதியவற்றில் கை எழுத்துப் பிரதியிலேயே காணாமற்போனவை பல. அவருடைய பெரும்பாலான கவிதைகளுக்கு நான்தான் முதல் வாசகனாக இருந்திருக்கிறேன். சிலவற்றுக்கு இன்று வரை நான்மட்டும் தான் வாசகனாக இருந்திருக்கின்றேன். நீண்டகால வற்புறுத் தல்களுக்குப் பிறகு சங்கோசத்துடன்தான் என்றாலும் இந்தத் தொகுப்பை வெளிவிட அவர் சம்மதித்திருக்கிறார். இத்தொகுப்பின் மூலம் இன்றைய தமிழ்க் கவிதை ஒரு புதிய 'வெளிச்சத்தைப்' பெறும் என்பதே என் நம்பிக்கை.*

*27.10.1988* — எம். ஏ. நுஃமான்

## கறுத்தப் புள்ளிகள் ♦

இந்தக் கறுத்தப் புள்ளியை
எப்படிக் கழற்றலாம்?
பல ஆண்டுகளுக்கு பின்பு
மீண்டும் ஒரு கறுத்தப் புள்ளி.

கேரளத்தில்,
பெத்தனி ஹில்லின் தென்னஞ்
சோலையின் நடுவில்

*நிகழ்ந்த சுவடுகள் –*
*ஆசிரமத்தில் அழுத நினைவுகள்–*
*அந்தக் கறுத்தப்புள்ளி – அதுவேறு.*
*இந்தக் கறுத்தப்புள்ளி – இதுவேறு.*
*ஓ! எத்தனை கறுத்தப் புள்ளிகள்.*

*நண்பனே,*
*எனது கவிதைகள் உனக்கு விளங்குவதில்லை.*
*நான் எனக்காகவா எழுதுகிறேன்?*
*எனக்காக உள்ள,*
*உனது தேவையின் பொருட்டு.*
*எனது மூல விக்கிரகத்தை*
*நீ காணவேண்டும் என்பதற்காக*
*எனது மூல விக்கிரகத்தில்*
*உனது கண்கள் படரும்போது,*
*அது ஊறும் புளகத்திற்காக*
*இந்தத் திரை நீக்கம் நிகழ்கிறது.*

*ஆனால் நீயோ*
*மூலவிக்கிரஹத்தைக் காணவில்லை,*
*திரையைத்தான் காண்கிறாய்.*

*நண்பனே,*
*லாலே – யே – தூர் – இன்*
*முதற்பாடல் உனக்குப் புரிகிறதா?*
*இரண்டாம் பாடல் உனக்குப் புரிகிறதா?*
*மூன்றாம் பாடலாவது புரிகிறதா?*
*ஆனாலும்,*
*இக்பால் மஹாகவி என்பதை*
*நீ ஒப்புக் கொள்வாய்.*

*சால்களுக்கிடையே நீர் பாய வேண்டாமா?*
*வரிகளுக்கிடையே நீ மூழ்க வேண்டாமா?*

வானத்து நட்சத்திரங்களின்
தூரம் உனக்குத் தெரியுமா?
எனினும்,
அவற்றின் காலடிகளை
நீ முத்தமிடுவதல்லையா?

எனது கறுத்தப் புள்ளியை
நீ எப்படிக் காணப் போகிறாய்?
தன் அயலவனுடன்
மூன்று மைல் நடந்தவன்
சிலவேளைகளில்
ஓர் அங்குலமும் பெயர
மறுக்கின்றானே,...உனக்குப் புரிகிறதா?

உள்ளாடையையும் உவந்து கொடுத்தவன்,
சிலவேளைகளில்
மேலாடையின் மீதுள்ள
பொத்தான்களைக் கூட
இறுக்கிப் பூட்டிக் கொள்கிறானே...உனக்குப் புரிகிறதா?

தான் அற்ற இடத்தில் சகலதையும் மறுதலிக்கும்
இந்த லோபித்தனம்,
இந்த நத்தைச்சுருங்கல்,
இந்த வக்கிரம்...புரிகிறதா நண்பா,
இந்தக் கறுத்தப் புள்ளியைக் கழற்ற
அவன்
எந்த ரசாயனத்தை எங்கே தேடுவான்?-
மீண்டும் பெத்தனி ஹில்லின் தென்னஞ்
சோலையின் ஊடு தேய்ந்த சுவடுகளா?
மீண்டும் ஆசிரமத்தில் அழுத மாலைகளா?

❖

*1978*

## அற்பங்கள் ♦

*அற்ப நிகழ்வும்*
*அர்த்தம் அற்றதும்*
*என்னுடன் வருக.*

*உதிரும் மணலும்*
*உருவழியும் நீர்வரையும்*
*எனது உவப்புகள்.*

*மங்கல் நிலவும்*
*மாலைக் கருக்கலும்*
*விடியற் கலங்கலும்*
*எனது விருந்துகள்.*

*ஒன்றுமிலா வெளியும்*
*உதிர்ந்து விழும் இலையும்*
*நெஞ்சை முழுதும் நிரப்பும்.*

*பாதையின் ஓரம்படரும் சிறுபுல்லும்*
*கானகத்தில் எங்கோ கண்மலரும் ஓர்பூவும்*
*போதும் எனக்கு.*
*(மற்றதெலாம் போக)*

*அற்ப நிகழ்வும்*
*அர்த்தம் அற்றதும்*
*என்னுடன் வருக,*

❖

***1970***

## காற்றிடையே

இன்னும் வெளியில் இடையிடையே
பின்நிலவில்,
தென்னைகளின் ஓலை திடீர் என்று சலசலக்கும்
பின் அவைகள் ஓயப்,
பிறகும் – சலார் என்று
வீசி எழுந்து விரைகின்ற வெள்வாடைக்
காற்றிடையே,
தூரக்
கடல் இரைந்து கேட்கிறது.

உள்ளறையில் கண்ணாள் உறங்குகிறாள்
பக்கத்தில்,
பிள்ளைகளைப் போட்டுள்ளாள்.
பின்னும் ஒரு முறை, எம்
சின்ன மகன் இருமித் தீர்த்துச்
சிணுங்கலிடை
கண்ணயர்ந்து போகையிலே...
மீண்டும் கடும் இருமல்.

“எத்தனை நாள் வந்த இருமல்!...
இதற்குமுன்
சத்தியும் காச்சலும்
சனியன்
நமக்கேதான் இத்தனை நோய்...”
என்றே எழாது படுத்தபடி
நித்திரை பாதி, நினைவுகளும் பாதிஎன
‘இச்சுச்சு’ சொல்லி
இதமாய் மகன் தோளைத்
தட்டிக்கொடுத்துச் சரி செய்தாள் கண்மணியாள்.
விட்டு விட்டு
இன்னுமந்த வெள்வாடை மேய்கிறது.
கொஞ்சம் அமைதி...
பிறகும் அதே குக்கல்.
இந்த முறை லேசில் இளகவில்லை.
சங்கிலிபோல்,
நெஞ்சு பிளந்து நிறுத்தலின்றித்
தொண்டையின் – அப்
பிஞ்சுச் சதையெல்லாம் பிய்த்து வருகிறது.

என்ன செய்வோம்?
ஏதறிவோம்?

எவ்வாறிதைத் தீர்ப்போம்?
அஞ்சிப் பதறும் அவளுக்கோர் ஆறுதல் நான்!

“நெஞ்சைத் தடவு...
முதுகை நிமிர்த்தாதே...
கொஞ்சம் சுடுநீர் கொடுப்போமா?...”
என்றிவைகள்
சொல்லி
மகனை என் தோள்மீது போட்டுலாவி
மெல்ல அவன் துயிலும் போது மெதுவாக
மெத்தையில் சேர்த்து
விளக்கைத் தணித்தபின்
சத்தம் எழாமல் கதவினையும் சாத்திவிட்டு
மண்டபத்தில் வந்தேன்.
மணி இரண்டு!...
சாய்மனையில்
குந்துகிறேன்
மீண்டும் குழந்தை இருமுகிறான்.

இன்னும் வெளியில் இடையிடையே
பின்நிலவில்
தென்னைகளின் ஓலை திடீர் என்று சலசலக்கும்.

பின் அவைகள் ஓயப்
பிறகும் சலார் என்று
வீசி எழுந்து விரைகின்ற வெள்வாடைக்
காற்றிடையே
இன்னும்
கடல் இரைந்து கேட்கிறது.

❖
*1968*

## புதைத்து வருகிறோம்

எல்லாம் முடிந்தது,
இனி என்ன, நாம் நடப்போம்.

மங்கல் படுகிறது.
இந்த மணல் அணைத்து என்ன பயன்?
ஆடு கடித்துத் தேய்ந்த
அரைகுறைப் பற்றைக்கிடையில்,
பழைய சவப்புதையல்
மண்சரிந்து தூர்ந்த வடிவும் தெரியலையே,
இன்னுமேன் நாங்கள் இதற்கு மணல் அணைப்பான்?

வண்ணான் வரவில்லை.
வந்த பறைப் பொடியன்
பாட்டோடு கூறவில்லை.
பட்டும்படாமலும் வாய்க்குள் முணுமுணுத்து
கம்பை வைத்தெடுத்துப் போய் இருந்தான்.
நாங்கள் பொருமிக் கிளம்பி என்ன?
வாயில் சிகரெட்டை வைத்துக் கொளுத்தி,
அதன் தூசுகளைத் தட்டி,
சுடர்முள் உள்இழுத்து விட்டான் புகை! பார்த்தோம்
அந்த வெண்சுருளில் நாம் மறைந்தோம்.

“சத்துக் குறைந்தவோர் சாதிதான் ஆனோமா?...”
கத்தினார் போடி.
கவனமில்லாமலா,
வாத்தியார், கிளாக்கர், வைரமுத்து ஓவசியர்
சத்தா சமுத்திரம், நம் சனமெல்லாம் பார்த்துச்
சும்மாயிருந்தார்?
சவத்தைச் சுமந்துவந்து
மண்ணோடு வாய்க்கரிசி மாத்திரமா போடுகிறோம்?–

எல்லம் முடிந்தது;
இனி என்ன போய்வருவோம்.

❖

*1968*

## அவள் நினைவு

*இளைய சிவப்பு அரும்புகளில்*
*இலை மறையும் புதுரோஜா.*
*விழிமூடி ஓர் இமை*
*தன் விளிம்புகளில் ஊறுவதை*
*துளி துளியாய் சிந்தும்*
*துயரவெளிப் பனித்திரையில்*
*அழுது முகம் மறைகிறது.*
*அலரிகளும் போய் மறையும்.*
*பளபளன்ற*
*சிவப்புநிற*
*பரல் கல்லில்*
*நீர் ஓடும்.*
*சரசரெனும் மாவடியில்*
*சருகுநிறக் கால் தெரியும்.*
*அலையெறியும் பாவாடை*
*முழங்காலின் அருகுயரும்*
*நடை நடையே*
*நடையதுவாய்*
*நடையினிலே கால் இரண்டு*
*விட முடியா ஒரு நினைவாய்*
*விளைவும் ஒரு மனத்திரையில்*
*கடல் அலைகள் மடிநோக்கி*
*கரையிருந்து மீள்வனவே.*

❖

***1968***

## நாங்கள் இரு தும்பிகள் ♦

*நாங்கள் இருதும்பிகள் பாடிவந்தோம்.*
*நாங்கள் இருபறவைகள் பறந்துசென்றோம்*
*எங்கும் திரிந்தோம் –புல் – வெளி – மலை – அருவி – ஆறு*
*எங்கும் பறந்தோம் – கிறவல் – மணல் – கடல் – காற்று.*

நானும் அவனும் கூடிச் சென்றோம்
எங்கள் சைக்கிள் கம்பிகள் சுழன்றன.
கண்ணில் மாலையில் பாயும் சுடரொளி
கம்பியில் பட்டு எங்கோ தெறித்தது
வேப்ப மரத்தின்கீழே,
மயானப்
பூமியின் அருகே,
உடைந்த தார்றோட்டுப் பாதையில்
தென்னஞ் சோலையின் கீழே
நானும் அவனும் கூடிச்சென்றோம்
எங்கள் சைக்கிள் கம்பிகள் சுழன்றன...

அந்த மூலையில் வந்து திரும்பினம்
"அப்போது எல்லாம் மாறும்" என்றனம்
"மாறி மாறி வளரும்" என்றனம்
"வளர்ந்து வளர்ந்து மாறும்" என்றனம்
இதுபோல் பேசிப்பேசி உண்மை தெளிந்தனம்
நாங்கள் இரண்டு தும்பிகள் பறந்தனம்...

அந்த மூலையைக் கடந்து வருகையில்
அடித்த கடலின் காற்றைத் துடைத்தனம்
செங்காந்தள் பூக்கள் தெரிந்தன.
'சிறிதுகாலம் மண்ணுள் இருந்தவை
இன்று மீண்டும் முளைத்ததே' என்றனம்
இறக்கத்துருண்டனம் – காற்றுள் புகுந்தனம்.

நாங்கள் இருதும்பிகள் பாடி வந்தோம்
நாங்கள் இருபறவைகள் பறந்துசென்றோம்
எங்கும் திரிந்தோம் –புல் – வெளி – மலை – அருவி – ஆறு
எங்கும் பறந்தோம் – கிறவல் – மணல் – கடல் – காற்று.

❖

*1969*

## ஆலம் இலைகள் ♦

ஆச்சி கடையில் அமர்ந்திருந்து மாலைமுதல்
பேப்பர் புதினம் பிரித்துரைத்துப் பேசியபின்
மூத்தார் எழுந்து நினறார்... "முன்னிருட்டு" என்றுசொல்லி

நூர்ந்த சுருட்டை விளக்கில் கொளுத்தியதும்
போகப் புறப்பட்டார்.

கோயிற் புறம் இருளில்
ஆலைகளின் பக்கம் அரிந்தரிந்து
ஏதோ ஒலிகள் இடையிடையே கேட்டன.

மானியர் சற்றே மடிந்த சடலத்தை
நேராக்கிக் கொஞ்சம் நிமிர்ந்திருந்து பின்சரிந்தார்.

ஆச்சி மணலில் அரைத்தூக்கம்
அப்பேத்தைப்

*பெட்டை தலையைச் சொறிந்திரண்டு பேன் எடுத்துக்*
*குத்துகிறாள்...*
*லாம்பு குருடுபற்றி மங்கியது.*

*சொத்திநாய் மண்ணுள் சுருள்கிறது.*

*மானியரோ,*
*"...அப்படிகா மாமி அது நமது காலம் இனி*
*எப்படியோ போகும். இருக்கிற குஞ்சுகளை*
*ஒப்பேத்தத்தான் வழி ஒண்டையுமே காணோம்.*
*முப்பதாண்டுச் சேவிஸ்; முழுப்பென்சன்!... என்னத்த?*
*ஒட்டுதில்லை கைல ஒருசதமும்..."*
*என்றுரைத்தார்.*

*ஒப்புதலுக்காய் கிழவி "ஓம் ஓம்" எனச் சொல்லி*
*நித்திரையே போனாள்...*
*நிசப்தம் வளர்கையிலே*
*பொக்கு பொக்கென்றந்தக் கோயிற்புறம் தொடர்ந்து*
*சத்தம் தெளிவாய் சருகிடையே கேட்கிறது.*

*"ஆலம் இலைகள் உழுதாக்கும். அப்படித்தான்*
*ஓயாது கொட்டி துளுக்கும்வரை உதிரும்.*
*அண்டு வரையும் அலுப்புத்தான்... போப்புறையா?–"*
*என்று சொல்லி, ஆச்சி இடுப்பைச் சொறிகின்றாள்.*

*"ஓங்கா" எனச் சொல்லி, துண்டை எடுத்துதறி*
*மானியர் கோயில் மணலில் இறங்குகிறார்.*

*நானும் மனது நசியா எழும்புகிறேன்.*

❖

***1970***

## சனங்கள்

அங்கே தொலைவில் சனங்கள்
அணியணியாய் வந்தபடி உள்ளார்.
இன்னும் வருகின்றார்.

வெங்கலங்கள், கோப்பை, விசிறி,
அரிதட்டு, பலூன்
இன்னும் பலவும்
இடையில் தெரிகிறது.

முக்காடு;
கைக்குழந்தை;
மூத்தப்பா தோள்மீதும்
சொக்கைப் பயல் ஒருவன்!

தோப்புளாச் சேலைகளைக்
கட்டியப் பெரிய மனுஷிபோல் கால் தடக்கும்
சின்னப்பொடிச்சிகள்.
இன்னும் சில முதியோர்.

எல்லோரும் வந்தார்கள்.
இன்னும் வருகின்றார்.

வந்தவர்கள்,
அந்த மணிலில் அமர்ந்தார்கள்.
'என்ன கலைப்புகா! கால்இசக்கம் இல்லை' என்றே
மங்கல் படும்பானை
அண்ணார்ந்து பார்த்தார்கள்.

மங்கல் படும்வானின் ஊடே
ஒருகாகம்
எங்கோ பறந்து செல்லும்.
எட்டத்தில் உள்ள அந்தத்
தென்னைகளின் ஓலை
சிறிது படபடக்கும்.

கொஞ்ச நேரம்
கடலின் கொந்தளிப்பைப் பார்த்தார்கள்.

பீடி புகைத்தார்கள்.
வெற்றிலையும் போட்டார்கள்
ஏதேதோ பேசிச் சிறிதே இருந்த பின்னர்
மீண்டும் எழுந்து
நடக்கத் தொடங்குகிறார்.

நீண்ட வழிதான்;
எனினும் சனம் நில்லார்...
சேம்பிக் கிடந்த என் நெஞ்சும்...
துணிகிறது.

❖

***1972***

## வாழ்வும் மரணமும் ♦

*அவளின் அழுகை சகிக்கவேயில்லை.*
*விளக்கை அலுமாரிமேல் வைத்துவிட்டு*
*கதவை திறந்து*
*வெளியிலே வந்தேன்.*

*நிலவு மங்கலாக விழுந்த வாசலில்*
*நாலைந்து முறை*
*நடந்து குழம்பினேன்.*

*கோயில் அரசமரம் முன்னால் தெரிந்தது*
*எல்லா இலையும்*

உதிர்ந்த கிளைகளின் பின்னால்,
நரைத்த பெரிய நிலாப்பந்து.

மங்கல்;
வெறுமை;
மயக்கம்.
மணல் சிதற
எங்கும் நடந்தேன்
எனது அடியின் கீழ்ப்பட்டு,
இறுகிப் பதிந்தும் உதிர்கின்ற
மண்ணின் நெருளை மனதில் புரட்டுகிறேன்.

இன்னமும் வேகமாய், இன்னுமின்னும் வேகமாய்
மேலும் கீழும்,
மீண்டும் மீண்டும்,
எனது கால்நோகும் வரையும்
மணல்கள் நொறுங்க நடந்தபின்
ஆறிப்படியில் அமர்கிறேன்.

'நானும் அவள்போல் அழுது நயமென்ன?
வீதியில் நேரும் விபத்துகள் எத்தனை?
அந்த விபத்தினைப் போன்று
சிலவேளை சந்தித்தல் கூடும்.
அதற்காய்ச் சரித்திரத்தை
உந்தும் விசைகள் உறங்குமா, என்ன?
எழுந்து,
கதவைத் திறந்துள்ளே வந்தேன்.
அவளின் அழுகை ஒலி இன்னும் கேட்கிறது.

❖

***1971***

## நண்டும் முள்முருக்கும் ♦

*சிவப்புப் பூக்கள்*
*முள் முருக்கம்.*
*மைனாக்கள் வரும், போகும்.*

இலைகள் உதி-ர்-ந்-து
வெறும் கிளைகள்
முட்களுடன்.

நுனிகளில்
வளைந்த பூந்தண்டுகள்.

அடியில் உள்ள பெரியபூக்களை
மைனா கோதும்.
அவை பின்னரும் கோத,
நுனியில்,
வரவர, சிறிய
நலிந்து நீண்ட
மொட்டுகள்,
நண்டின் பூப்போல,
ஆமாம்
நண்டின் பூப்போல.
அம்மா சொன்னாள்!
நண்டு சினைக்க
பூக்கும் முள்முருக்கு.
முள்முருக்குப் பூக்க
சினைக்கும் நண்டுகள்.

நாளைக் காலை
சந்தைக்குப் போகலாம்.

❖

***1979***

## சந்தியிலே நிற்கிறேன் ♦

சந்தியிலே நிற்கிறேன்
பகல் சாய்கிறது

மங்கல் இனி வந்துவிடும்
அதைத் தொடர்ந்து வரும் விடிவு

அதுவரையில்
இந்த மக்கள் போய்த் துயில்வர்

இருள் அகன்று விடிகையிலே
முந்திடுவர்
வேலை செய்வர்
முறுவலிப்பர்
பின் இரவு வந்துவிடும்
போய்த் துயில்வர்......

மறுதினமும் எழுந்திருந்து
“இன்று மட்டும் –
இனித் துன்பம் இல்லை” என்பர்
போய் உழைப்பர்

சந்தியிலே நிற்கிறேன்
பகல் சாய்கிறது

வயிரண்ணன் வண்டியிலே சம்மாளம்
மாடு இரண்டும்
தளர் நடையில், சென்ற தடம் செல்லும்
அங்கே
திடீரென்று அவர் விழித்து
“இந்தா படித்தா” என்றிரைகிறார்

எனினும் அந்த
நொந்தலுத்த மாடுகளோ
நோவறியா

ஆதலினால்
வந்த நடையே தொடரும்
வயிரண்ணனும் அயர்வார்

சந்ததியிலே நிற்கிறேன்
பகல் சாய்கிறது

என் இனிய
சுந்தரக் கனவுகள் – வான்
தொடர்கிறது......

சுமந்த மக்கள்
வெந்தெழுவார்
சமர் செய்வார்
வில் நிமிர்ந்தும் துரியர் படை
வென்றிடுவார்
நல்லபல விதி செய்வார்

இந்த மக்கள் போய்த் துயில்வர்

அதுவரையில்
இருள் அகன்று விடிகையிலே
முந்திடுவார்
வேலை செய்வார்
முறுவலிப்பார்
அவ்வளவே.

❖

***1968***

*இன்று மிகத் துயர் உற்றேன்*
*என் இனிய அன்பே,*
*இவ்விரலின் நிலவொளியில் என்னுடன் நீ இருந்தால்*
*வெண்பனியின் துளி சொட்டும்*

பூங்கொத்தைப் போன்று விம்முகிற என் நெஞ்சில்
ஆறுதல்கள் தருவாய்.

'இன்று, இந்த மிகச் சிறிய சம்வத்திற்காக
இவ்விதமோ துயர் உறுதல்'
என்று நினைப்பாயோ?
இன்றளவும் வாழ்ந்துள்ளேன்
எனினும் எனதன்பே,
எனது மனம் பூச்சிட்டின் மென் சிறகுத்தூவல்.
என் பாதம்
இடர் கல்லில் அழுந்தாத ரோஜா.
என் நண்பர் மிக இனியர்
சுடு சொல்லை அறியார்
கண்ணீரின் துளிபோல
காலம் எனும் நதியில் கலப்பதற்கே உயிர் செய்த
காதல் உரு ஆனார்...

போகட்டும்...
இன்று முதல் கசப்புகளை வாங்கிப் புசிக்கிறேன்,
அதற்கென்ன!
என்மனதை, என்றும்
நோகாது வைத்திருக்க வேண்டுமென எண்ணேன்
நொந்தவர்தான் வாழ்க்கையிலே சாதனைகள் செய்தார்.
ஆதலினால்
என் மனதைக் கல்லாக்கிக் கொள்வேன்.
அம்புவரும் அது முறியும்
நான் நடந்து செல்வேன்.

ஏகமும்
தாம் என்று எண்ணுபவர் மாள்வார்
இப்பெரிய உலகினிலே எத்தனைபேர் உள்ளார்!

ஆகாய வீதியிலே
என் நெஞ்சைக் கிள்ளி அத்தனையும் இட்டதுபோல்
மின்னுகிற
வெள்ளிப் பூ அனந்தம் – அதைப்போல
தினம் மேதை பூப்பார்
பூச் சிவந்த சேவல்
ஒருநாள்
இரவு
கூவும்.

என் இதயம்
இப் பரந்த வான் முழுவதும் ஆகி இருப்பதனை
ஆர் அறிவார் என் இதய ஊற்றே?...
என் எதிரில் தெரிகின்ற வான்முழுதும்,
இந்த இரவெல்லாம் ஒளிர்கின்ற கற்கண்டுத்தூளும்
பொன்னிதயம் என்னுள்ளே
நெடுஞ்சுரங்கமாகிப் பூக்கின்ற அழகைத்தான்
ஆர் கண்டார் அன்பே

விண்வெளியில்
உதிர்ந்துள்ள இவ்வெள்ளிப் பூக்கள் மீது யான்
அடிவைத்து நடக்கின்ற போதில்,ன
"என்ன இவன் அழகு"
என்று இவர் வியந்து கொள்ளும்
இனிய பொற்காலம் ஒன்று வந்திடுமோ –
அல்லால்
இன்றிரவு
இதோ வெளியில்
என் கிணற்று வாழை இலைகளிலே
நிலவினிலே
பனித்துளிகள் பட்டு
'இச்'

*என்ற முத்தத்தின் ஒலியுடனே*
*அவைகள் இழிந்து*
*நிலம் சொட்டுவதைப் போல் மறைந்துபோமோ...*

*அச்செயலும்*
*எனக்கு மிக உவப்புளதே – ஆகா*
*அலை கடலும்*
*புவி முழுதும்*
*அருமை உயிர்ச்சிட்டும்*
*சப்திக்கும் ஒருங்கமைந்த ஓசையில்*
*என் குரலும் சங்கமிக்க*
*என் இயல்பை நான் பாடுகின்றேன்*
*இச்சை மிகும் சுருதியினை*
*இதனின்று வேறாய் எழுப்புகிற நரம்புகளை*
*நாம் முறித்து வைப்போம்*
*எச்சிறிய புல்லும்*
*அதன் இயல்பினிலே முழுமை.*
*இடுகாட்டில் முளைக்கின்ற * கழனியும்ஓர் அருமை!*
*அப்படியே நாம் ஆனோம்.*
*அதோ இந்த நிலவில்*
*அகன்ற இலைவாழையிலே பனிசொட்டும் கீதம்*
*'இச்'*
*என்ற ஒலியுடனே எழுகிறது மீண்டும்;*
*இனி என்ன!*
*போய் துயில்வேன், என் உயிரின் கண்ணே.*

❖

***1968***

## மென்மையின் தளைகளிலிருந்து

*இருட்டில் மிதந்த இசை*
*எங்கோ தூரத்தில் ஓர் வானொலி*
*படிப்பு அறுந்து விழ......*

பூர்வ ஜென்ம உணர்வுகள்....
ஓர் பூ மொக்கு அவிழ்ந்தது.
தங்க மகரந்த துகள்கள்
பிள்ளையார் கோயிலின் முன்னுள்ள
வெண்ணிற பூ வாசனை...
இந்த உணர்வால் என்ன பயன்?
இந்தக் கனவுகள் எதுவரை?

பாலைவனம்
சுடுமணல்
வெட்டுக் கிளி

தார் றோட்டு
வாகனங்கள்
நிதானம்
சமநிலை தளம்பாத சைக்கிளின் ஹெண்டல்...
இந்தக் கத்தி விளிம்பிலே
எப்போது கால்வைத்தோம்?

புறாவைப் பொத்திப் பிடித்து
கூட்டினுள் அமுக்கியபின்
புத்தகத்தைத் திறக்கிறேன்
இருட்டிலே இன்னும்
அந்த இசை கேட்கிறது
நீண்டு மெலியும் புகைக் கோலம்
அது இப்போது மரண கீதம்
புறா இறந்த ஊர்வலம்
என் விழி நனைகிறது
கறுத்த எழுத்துகள் கரைகின்றன.

❖

***1971***

## ஒரு நகரின் முகமற்ற முகங்கள் ♠

முகங்கள் முகங்கள் முகங்கள்
விலகல்
கடத்தல்
விழிகள் ஓராயிரம்
பட்டுத் தெறித்தல்
படுதல்
நெரிதல்
தொடர்தல்
முகங்கள் முகங்கள் முகங்கள்.

உள்ளம் சுர் என்று
அப்பங்கள் தீயும்;
பெல்போட்டங்கள்
நெஞ்சு
மேட்டில் தளர்கின்ற
உல்லாசச் சேட்டுகள்
உடுகு நடுக்களின்
நாணும் பட்டியும் நகர்ந்த கோலங்கள்
கூந்தற் புருசத்துவம்
கிருதாப் பெண் முகம்
எல்லாம் கலந்து

எல்லைகள் கரைகின்ற பாலியற்
புதிய சின்னங்கள்
முகங்கள் முகங்கள் முகங்கள்.

எந்த முகம்
எந்த நெஞ்சு
எந்த இடை
எந்த உடுகின்
எந்த மேல் கீழ்
வந்து அறையின் வளரும் நினைவில்
துண்டு, துணுக்குகள்
உதிரிக் கீறலின் ஒட்டுறவு இல்லா
சித்திர வடிவுகள் –
சிறுபுல் வெளியிலே
ஆயிரம் பனித்துளி தெறிக்கும் ஞாயிறு,
பிடிபடா முழுமை;
பிடிபடா முழுமையில்
இழுபடும் உள்ளம்.
பிய்ந்து பிய்ந்து, நீள்
விண்வெளி ஓரவிளிம்பினில்
தலை கால் சுருள
புயலில் கவிழ்ந்து
துயில் நீத் தெழுகின்றோம்
முகங்கள் முகங்கள் முகங்கள்.

பலமுகங்கள்
தெருவழியே
பாம்புச் சுழி கழித்து
முகங்கள் முகங்கள் முகங்கள்.

❖

*1974*

## துருவத் தரையின் வசந்தப் பூவுக்கு ♦

*துருவத் தரையிலும்*
*வசந்தப் பூக்கள் உண்டல்லோ*

*வசந்தப் பூக்களின் வருகைக்காக*
*துருவப் பாளங்கள் கரையத் தொடங்காவோ*

*துருவப் பாளங்கள் கரையத் தொடங்குகையில்*
*புத்தம் புதிய புது நீர் அந்த*
*வெண்பனி வாய்க்கால் விளிம்பில் சலசலென*
*ஓடிவருகையில்....ஓ!-*
*வாழ்வின் வனப்பை வரைய முடியுமா?*

*ஆங்கோர்*
*சான் உயரப் பூக்காடு*
*தள தளத்து நின்றந்தச்*
*சீதளக் காற்றில் சிலிர்த்து நிமிராதோ?*

*ஓ!*
*நான் கரைய வேண்டும்*
*நான் கரைய வேண்டும்*
*என்னுள் ஒடுங்கி இருக்கின்ற ஆனந்த*
*மென் உணர்வின் வித்தெல்லாம் இந்த*
*மண்ணில் முளைத்து மலர்ந்து சொரியாதோ*

*நான் கரைய வேண்டும்*
*நான் கரைய வேண்டும்*
*துருவத் தரையின் வசந்தப் பூவுக்கு.*

❖
***1976***

## ஒரு பொழுதின் நிறைவுக்காக ♦

*தினசரியை வாங்கித்*
*திரும்பி,*
*அந்தப் பனிமூட்டம் கலையாத*
*இளம்பொழுதில்*
*தனிமை விழிமலரும் சிறுதெருவில்*

*நிமிர்கையிலே*
*அந்தப் பொழுதுக்கும்*
*தெருவின் தனிமைக்கும்*
*ஒரு கவிதை உயிர் கொடுக்க*
*நீ வந்தாய்*

*நடனமெல்லாம் ஒருநடை என்றே*
*நான் அறுதியிட,*
*இளமையெல்லாம் ஒரு அசைவென்றே*
*நான் இயல்புரைக்க*
*வந்தாய், கடந்தாய்*

*இந்த மதியப் பொழுதினிலே,*
*உன் கறுத்த முகச்சுவடு*
*என் நினைவு மணல் வெளியில்*
*உருத்தெரியவில்லை.*

*எனினும் அந்த வெண்சீருடையின்*
*கொடி அசைவு பதித்த*
*பெருஞ்சுவடு*
*இன்னும் அகலவில்லை.*

*எந்தத் தென்றலில் அசைந்த கொடியோ நீ!*
*எந்த நட்டுவன் தாளத்தில் நடப்பதோ*
*உன் நடம்?*
*நடனமெல்லாம் நிச்சயமாய்*
*ஒரு நடையேதான்.*
*இளமையெல்லாம் நிச்சயமாய்*
*ஒரு அசைவேதான்!*

❖

***1976***

இரு
எழு
முழந்தாள் இடு
– இது ஒரு நாடகம்

சுடர்கள் பல
நடுவில்
சில ரோஜாமலர்கள்
பொன்மணிச் சரிகை விரிப்பு
பூசைப் பலிபீட
அலங்கரிப்பு.

செஞ்சிலுவையின்கீழ்
குனிந்து
செபித்து
நிமிரும்
தக்கவஸ்திரம் தரித்த
பங்குக் குரு.

இது கிறிஸ்த்துவின் சரீரம்.
இது கிறிஸ்த்துவின் இரத்தம்.
விசுவாசிக்கின்றாயா?
ஆமன்.

(நாக்கை நீட்டு)
கண்களைக் குவி
கரங்களைக் கூப்பு
நடந்து செல் –
புல்லும் நோகாது
உள்ளினும் உள்ளாய் ஓர்ந்து
எல்லாம் ஒன்றாகி –
கோயிற் சுவர்கள்,
இடையிற் பெருந்தூண்கள்
மின் குமிழ்கள்,
குளிர்காற்றில் மெதுவாய்
ஊசலிடும் சோடனைகள்

உறங்குவது போல் வணங்கும்
அணங்குகள்,
அப்புகள்,
ஆச்சிகள்,
ஆயிரம் கருந்தலைகள்
நரை திரைகள் –
எல்லாம் ஒன்றாகி, ஏகமாய்,
இயைந்து கரைந்த வாரியாய்,
உள்நோக்கி ஓட
உறைந்த பனிவெளியின்
தன்னந்தனி உருவாய்,
நினைவுத் தடம் அழிந்து,
விண்ணில்,
காற்றில் மிதந்து,
சுவர்க்கத்தின்
வாயிலின் இரண்டு மருங்கிலும்
தேவதைகள் பூச்சொரிய
நடந்து நடந்து சென்று
ஒரு கனவு நிகழ்ந்ததென
இரு –
எழு –
முழந்தாள் இடு
– எனும் இந்த நாடகம்.

நம்பிக்கை வேறு நடத்தை வேறு.
மனம் வேறு வாழ்க்கை வேறு.
நான்தான் அற்றுப்போன
நமைச்சல்
குமைச்சல்,
திக்குமுக்கு
திணறல்.
இது கிறிஸ்த்துவின் சரீரமா?
இது கிறிஸ்த்துவின் இரத்தமா?

கிறிஸ்த்து என் இரட்சகரா?
நான் பாபாத்துமாவா?
பின் ஏன் இந்த முடங்கல்?

கசப்பு குபீர் எனும்.
அமுங்கி அழுங்கி மனம் அழும்
கெத்ஸ்ஸமனித் தோட்டத்தில்
கடைசி இரவில்
கைகளை விரித்து,
வானத்தைப் பார்க்கிறேன்.
“பிதாவே,
இந்தப் பாத்திரம், எனைவிட்டு
நீங்கக்கூடுமாயின்,
நீங்கட்டும்...”

பிதா எங்கே?

வானத்தைக் கிழித்து,
திரைகளை நீக்கி,
பிதாவின் பொருளை
தெரிந்தும் வெகுநாள்.
பின் ஏன் இந்த முடங்கல்?
ஏன் இந்தப் பாசிசம்?
ஏன் இந்த அழுந்தல்?
அமுங்கல்?
அமுங்கி,
அமுங்கி,
கழுத்தைக் காலுடன் பிணித்து,
இழுபட்டுப் போகும்
இந்த எருது
ஒருநாள் தலையை உயர்த்தினால்?
கொம்புகளை பூமியில் குத்திக் கிழித்து
மண்ணைப் பூச் சூடினால்? –

மடிந்த முன்னங்காலின்
பெரிய குளம்பினால்,
பூமியைக்
குழிபறித்துக் குழிபறித்து
குமுறிப் பெரியமூச்சுடன்
தலையை நிமிர்த்தினால்?
கீழோடும் வேர்கள் கிழிந்து அறுபடும்
அவள் சாய்ந்து சவமாவாள்.
அந்த கால்களிடை
கிடந்து மிதிபடுவாள்.

அவள்
பூமியைக் குத்திப் புரட்ட அறிந்திலள்.
வானத்தைக் கிழித்து
திரைகளை நீக்கத் தெரிந்திலள்.
இந்தச்
சதுப்பில் வேரோடித் தழைத்து
வானத்தை நோக்கி மலர்பவள்.

அதோ சேலைக்கரையிடை பாதச் சிவப்பு மறைய
புல்லும் நோகாது,
உள்ளினும் உள்ளாய் ஓர்ந்து
எல்லாம் ஒன்றாகி,
ஏகமாய்
இயைந்து, கரைந்த வாரியாய்
உள்நோக்கி ஓட,
உதிர்ந்த பனிவெளியின்
தன்னந்தனி உருவாய்
நினைவுத் தடம் அழிந்து,
விண்ணில், காற்றில்
மிதந்து,
சுவர்க்கத்தின்
வாயிலின் இரண்டு மருங்கிலும்

தேவதைகள் பூச்சொரிய,
நடந்து நடந்து நடந்து சென்று
ஒரு கனவு நிகழ்ந்ததென,
அவள்
குருத்தும் மூளையுமாய்.
குழந்தைகள் பின்தொடர,
சதுப்பில் வேரோடித்
தழைத்த கைகூப்பி
வானத்தை நோக்கி மலர்கிறாள்.
வேர்சிதற
தழை சிதற
மூளை சிதற
கால் அடித்து
கொம்பு குத்தி
போர் பிடிக்கும்
நிர்மூலப் பயங்கரத்தில்
இரு
எழு
முழந்தாள் இடு
– எனும் இந்த நாடகம்.

கசப்பு குபீர் எனும்.
அமுங்கல்
அழுந்தல்
நமைச்சல்
குமைச்சல்
எரிச்சல்
திக்குமுக்கு
திணறல்.

❖

*1978*

## எகிப்தின் தெருக்களிலே...

*ஏன் எங்கள் ஆண் உடம்பு*
*இன்னும் எழுவதில்லை?*
*ஏன் எங்கள் யோனிகளில்*
*அரிப்புக் குதிர்வதில்லை?*

*அரிசி விலை 4 ரூபாய்*
*சீனி விலை 9 ரூபாய்*
*சீத்தை பதின் மூன்று*
*டெற்ரோன் கைக்கு எட்டா.*

*நீண்ட கியூவரிசை......*
*நிலவுபடும் சாமத்தில் தூங்காது*
*எழுந்து, துடித்தோடிச் சூரியனின்*
*தங்கமுகத்துக்கு தலைசாய்த்து,*
*வெங்கதிரின் வீச்சைத் தாங்கி*
*வியர்த்து, விதிர்விதிர்த்து*
*நிற்கும் பெரிய நீண்ட கியூவரிசை –*

எங்கள் பணம் தந்து
எடுக்கும் பொருளுக்கு
பல்லிளித்துக்
கால்தொட்டுக்
கால்தொட்டுப்
பந்தம் பிடிக்கின்ற வல்வினைஊழ்.
மனிதச் சுயமதிப்பு
எள்ளவும் இல்லாத ஈனம்.
எங்கள் ஆண்உடம்பு ஏன் எழுவதில்லை?
எங்கள் யோனிகளில் ஏன்
அரிப்புக் குதிர்வதில்லை?

எகிப்தின் தெருக்களிலே –
– இன்றையப் பேப்பரைப்பார் * – எகிப்தின் தெருக்களிலே
கடை உடைப்பு.
தீ வைப்பு.
போலிசை எதிர்த்து மக்கள் போராட்டம்.
கண்ணீர்ப் புகை
துப்பாக்கிச் சூடு
அந்தி தொடங்கி வைகறை வரையும்
ஊர் அடங்குச் சட்டம்
அதையும் உதறி
ஐம்பதுபேர் மரணம்
அவர்கள் தொழிலாளர்
அவர்கள் மாணவர்கள்.
நூற்றுக்கணக்கில்
தடை உடைவு
கை முறிவு
கால் நொடியல்.

சதை கிழிந்து வழியும்
இரத்தச் சதுப்புகளில்
சிவத்தமலர் பூக்கும்.

அவர்கள் தொழிலாளர்கள்
அவர்கள் மாணவர்கள்

இத்தனையும் ஏன்?
இங்கு உள்ளதுதான் அங்கும்;
விலை உயர்வு
விலை உயர்வை எதிர்த்தெழுந்த
வெங்கனலின் அலை எறிகை!
அது இங்கே,
மெத்தைச் சுருங்கி,
கொட்டப் பாக்கினும் குறைவாய் –
துவாரம் சூம்பி
ஈற்று மாறிய கிழடாய் – எல்லாச் சுமைகளையும்
முதுகிலே ஏற்றபடி,
சொல்வார் சொல்லுக்குத்
தலை அசைத்துக்
கரம் கூப்பி
கறுப்பை வெள்ளை என்றால் அதையும் நம்பி
வெள்ளையைக் கறுப்பென்றால் அதையும் நம்பி,
பிடாரனின் ஊதலுக்கு
தலைகெழித்துத் தலைகெழித்து
வளைந்து நெளிந்து, அடங்கிச் சுருளும்
சவமாய், சவங்களாய் –
எங்கள் ஆண்உடம்பு ஏன் எழுவதில்லை?
எங்கள் யோனிகள் ஏன் அரிப்புக்கொள்வதில்லை?

அங்கே, எகிப்தில்,
வெறும் அலை எறிகை மட்டுமன்று.
ஏழையின் முதுகில்
கால்நாட்டிப் பந்தலிட்டு,
உண்டு, குடித்து, உடலை விலைபேசும்
நைட் கிளப்புகளை தகர்த்து வீசினர்.
உல்லாச புரியின் சல்லாபத் தேர்களாய்,

நடைபாதை எறும்புகளில் நயனம் பாவாது
படகுபோல் பவனிவரும்
பெரும்புள்ளிக் கார்களை
எரிமூட்டி, உருட்டி இழுத்தப்புரட்டினர்.
“சாதாத் ஒழிக” என
மேகத்தைக் கீறி
வான மண்டலத்துள் சேதி சொன்னார்.
விடுதலைச் சதுக்கத்தில் ஹில்ட்டனுக்கு முன்னால்,
அவனுடைய
பத்து அடி உயர (சுவரொட்டிப்)
படத்திற்குக் கல் எறிந்தார்.
கல் எறிந்து கல் எறிந்து
கை அலுத்த,
பின்னர் அதனைப் பிடித்துக்
கிழித்தெறிந்தார்.
கிழித்தெறிந்த தண்டுகள்
கீழே விழுகையிலே
நைல்நதி ஓர ஹில்ட்டன் நடுங்கியது.
அரபுலீக் தலைமைச் செயலகம் அதிர்ந்தது,
அவற்றின் அணைப்பிலே கிடந்த
விடுதலைச் சதுக்கமோ விழித்துக் கொண்டது.

எங்கள் அண் உடம்பு
ஏன் எழுவதில்லை?

எங்கள் யோனிகள்
ஏன் அரிப்புக் கொள்வதில்லை?

❖

*1977*

## நிலவும் ஒரு வழிப்போக்கனும் ♦

*நிலவே*
*இந்த வழிப்போக்கனும்*
*உன்னைக் காண்கிறான்*
*நீ அவனைக் காண்கிறாயா?*

நிலவே
நீ உயரத்தில்
வானத்தில் இருக்கிறாய்.
அகண்டமான வானத்தின் நடுவே
அமர்ந்திருக்கிறாய்.
உனது தண்ணொளி
எங்கும் தழைகிறது
ஒரு ஓரத்திலிருந்து
இந்த வழிப்போக்கன்
உன்னைக் காண்கிறான்.

உனது
வெள்ளி ஓரவிளிம்பின்
இமைப்புக்குள்
இந்தச்
சின்ன மனிதன் தெரிகிறானா?
நீ இந்த வழிப்போக்கனைக் காண்கிறாயா?

நீ அமர்த்துள்ளாய்,
நிறைவாகத் ததும்புகிறாய்.
உன் நிறைவுக்கு
இவன் உவமை தேடுகிறான்.
உன்னையும்
இவன் கிக்கிலிக் கொட்டை
என்று எண்ணினானா?
கிக்கிலிக் கொட்டையை கிலுக்கிப் பார்த்தால்
சத்தம் கேட்கும்

அந்தச் சத்தம்தான்
இவனுக்கு சந்தோஷமளித்ததா?
சத்தம்

கிக்கிலிக் கொட்டை உள்ளமைக்கு
சான்று என இவன் நினைத்தானா?
அதே சத்தம்,
அதனுள் இருக்கும்
வெற்றிடத்திற்கு சாட்சி என்று
இவன் ஏன் உணரவில்லை

நீயோ நிறைந் திருக்கின்றாய்
இவன் இன்று வந்தவன்
இவன் வர முன்னரே
நீ நிரம்பி இருக்கின்றாய்
நிரம்பி இருப்பது கிலுங்காது அல்லவா?
அது அடக்கம் எனப்படுவது அல்ல.
நிறைவு. – நிறைவான நிறைவு.
உன் நிறைவைக் கண்டு
இவன் திகைக்கிறான்.
தன் கிக்கிலிக் கொட்டையை
கிலுக்கிப் பார்க்கும்
குற்றத்திற்காக முகங்கோணி
ஒதுங்குகிறான்.
அந்த இலைகளின் இருளில்,
இந்தப் புதர்களின் மறைவில்
இவன் ஒதுங்கி ஒதுங்கி நடக்கின்றான்.
நிலவே,
நீ இந்த வழிப்போக்கனைக் காண்கிறாயா?
உனது வெள்ளி விளிம்பின் இமைப்புக்குள்
இந்தச்
சின்ன மனிதனும் தெரிகின்றானா?

❖

*1978*

**மறுதலை** ♦

நீ
இன்னும் மலர்கின்றாய்.

நிழல் தேடி
நான் அலைந்து
வாடி
நலிந்து
மிகத் தேய்ந்து
போன இடம் பாராது
வந்த இடம் தேராது
பாதியிலும் பாதி – பரதேசி ஆண்டியாய்,
தூசும் புழுதியும் தோயத் திரும்புகையில்
ஓ!
நீ இன்னும் அங்கே நிறைய மலர்கின்றாய்...

உன்றன் அருகில் ஓடுகிற நீர் வாய்க்கால்
இந்த விதியிலிக்கு ஏன் வரண்டு விட்டது?

எல்லாம் முடிந்தது...
எல்லாம் முடிந்ததென
உள்ளம் உணரும் ஒரு கண நீக்கலில்
நிம்மதி நீண்ட வெளியாய்த் தெரிகிறது
நிம்மதிதான் – எந்த நிகழ்வும் முடியுமெனில்...

நான் அதுவல்ல.
அதுவாக என்னை நான்

வீணாய் உருவகித்து, சற்று மினக்கெட்டதெல்லாம்
ஊமை மயக்கமென இப்போதுணர்கிறேன்.

நான் அதுவல்ல
அது என்னில் உள்ளதல்ல.
ஏதேனும் முன்னர்
இருந்ததெனச் சொன்னாலும்
ஆள் இப்போ காலி.
ஆமாம்
பாலை – வெறும் தரிசு.
நான் அதுவல்ல
அது என்னில் உள்ளதல்ல...
என்றாலும்
நீ அங்கே இன்னும் மலர்கின்றாய்.

வாழ்வும் மகத்தானதே.
ஆயின், அதை வழுவித்
தாழவிடும்போது அதுவே தலைச்சுமை.
வீண் மயக்கம்
கோடி விழலான சிந்தனைகள்
ஆலாப் பறக்கையிலே
கீழே
எறும்பு ஊரும்,
எறும்பு ஊரும் பாதையிலே
ஈசல் முளைத்து வரும்,
ஈசல் சிறகொடிந்து
எங்கெங்கோ போய் மடியும்.
போய்மடிந்த
ஈசற் புதற்களைத் தேடுகிறேன்...

இந்த நிராசையை முன்னர்
இகழ்ந்ததுண்டு.
'வாழ்வின் முனைவுக்கு இது மாறு'

என்றதனை
நானும் உறுதியாய் நம்பி நிராகரித்தேன்.
ஆயினும்,
வாழ்வின் ஆறாத காதலுக்குக்
கீழே அடிவேராய்
பின்னிக் கிடப்பதும்
வாழ்வு முனைவின் மறுதலையாய் உள்ளதுவும்
இந்த நிராசையே என இப்போதுணர்கிறேன்.
எனது நிராசைகளே எனது நிசங்கள்.

உன் முன்னே,
என் நினைவு ஊர்ந்த சிறு தடமும்
இல்லாமல்,
காற்று இரவு பகலாக
மேய்ந்த கடற்கரையின் வெள்ளை மணல்போல
தூர்ந்து அழிதல் ஒன்றே சுகம்
அந்த நிர்மூல
சம்ஹாரம் ஒன்றை
நினைவு தழுவுமெனின்
இந்த விதமாய் எழுதிக் கிளர்வதுமேன்?
இந்த எழுத்தும் எனது மயக்கம் என்பேன்.
நிராசையின் கீதமும் வாழ்வின் ஒரு முனைப்பே.
'சம்ஹாரம்' கோருகிற
அற்றநிலைச் சார்பினுக்கும்
வாழ்வின் நிறைவு மிகத்தேவை
அஃது அற்ற
கோழியின் மேச்சலில் இன்னும் குறுகுறுத்து
ஓடி அலைந்தே ஓடிந்து திரும்புகையில்
ஓ!
நீ இன்னும் அங்கே நிறைய மலர்கின்றாய்

❖
*1977*

## வெறும் வரிகளும்
## ஒரு முன்இளவேனிலும் ♦

வெறும் வரிகள்... வெறும் dots
வெறும் கோடுகளும்... வெறும் புள்ளிகளும்.
வெறும் இதயம்.

வெளியில்
இளம்வெயில்,
சிலிர்த்துச் சிலிர்த்திருந்து
திடீரென
திமிறிப் பாயும் இளங்காற்று.

தென்னோலைகளின் திரும்பல்கள்
புரளல்கள்
மிருதுவான நிலவானின்

வெண்பஞ்சு மிதப்புகள்
எனினும்,
வெறும் இதயம்,
வெறும் கோடுகளும்... வெறும் புள்ளிகளும்
வெறும் வரிகள்... வெறும் dots

தளர்ந்த கடமைகள்
தவறிய வாய்ப்புகள்
பொன்முடியில் மினுங்கிய வைரமணி
புழுதியில், –
வழியின் ஓரத்தில் –
வண்டில் தடங்களில்
புதைபட்டு, நெரிபட்டு...
எனினும், புதிய
சங்கல்பங்கள் இல்லை,
சவால்களும் இல்லை,
பின்னோக்கலும் இல்லை,
முன்னோக்கலும் இல்லை.
முனைவதற்கு அந்தப் பெருமலைகளா?
இன்னும் இன்னுமா?
அவன் என்ன Sisyphus ஆ?
அந்தத் தெளிவும், இந்த வெளியும் போதும்.
வெட்டைவெளி,
வெறும் வெளி.
வெறும் கோடுகளும்... வெறும் புள்ளிகளும்.
எழுத்துகள் துளிர்க்காத
வெறும் வரிகள்...
வெறும் dots...

❖

*1978*

## விஸ்வ ரூபங்கள் ♦

கண்ணீரைக் கடந்துள்ளோம்
வியப்புகளை மீறியுள்ளோம்
உணர்ச்சிச் சுழிப்புகளை உதறிவிட்டோம்

இழப்புகளைப் பற்றிய ஏக்கமில்லை
தகர்வுகள் பற்றிய தயக்கமும் இல்லை
ஒருபெரும் நிகழ்வைத் தரிசித்துள்ளோம்
அதன் பலத்தில்
அதன் விறைப்பில்
அதன் லயத்தில்
அதன் துணிவில்
நிமிர்ந்து நிற்கிறோம்
நினைத்து நினைத்துச் சிரிக்கவும் செய்கிறோம்

வேலிகள் வீழ்ந்தன
மதில்கள் தகர்ந்தன
தென்னை மரங்கள் சிதறிப் பறந்தன
ஆலைகள், அரசுகள்
அடியோடு சாய்ந்தன.
கிடுகு திருகிக் கிடக்கும் கூரைகள் –
ஓடுகள் வீழ்ந்து உடைந்த முகடுகள் –
மறைப்புகள் மறைந்த வானும் வெளியும்.

மறைப்புகள் அற்ற வானவெளியிலே
அகண்டமாய்,
நாங்களும் எங்கள் குடிசையும் –
அகண்டமாய்,
நாங்களும் எங்கள் நம்பிக்கைகளும் –

இரவின் இருளில்,
ஊ ஊ என்றந்த ஓசைப் பிரளயம்
வீசி அடித்த விஸ்வரூபத்தில்
சிறிய பேச்சுக்கள் செத்துப் போயின.
சிணுங்கல்
கலங்கல்
இரங்கல் என்னும்
அசட்டுத் தனங்களும் அற்றுப் போயின
நிசத்தை நோக்கி நிமிர்ந்து நிற்கிறோம்

ஆமாம்
கண்ணீரைக் கடந்துள்ளோம்
வியப்புகளை மீறியுள்ளோம்
உணர்ச்சிச் சுழிப்புகளை உதறியுள்ளோம்
நிசத்தை நோக்கி நிமிர்ந்து நிற்கிறோம்.

❖

*1978*

**நத்தைச் சுகம்** ♦

கைப்புக் குளிகை –
முழுதையும் விழுங்க வேணும்
தப்ப முடியாது
முழுதையும் விழுங்க வேணும்

விட்டுப் பறக்கலாம்
உன்னிக் கிளம்பி
பெரும் சிறகை விரித்து
வானம் முழுதையும் மறைத்து
ஒரே வீச்சாய் தாவி
எதிர்ப்பட்ட திசையில்
நெடும் தூரம் போய்விடலாம்.

ஆனால்
மனிதத்தளைகள்.

காலில் கட்டியுள்ளது
ஒரு சின்ன வாழைநார்தான்
எனினும் அறுத்துவிட முடிகிறதா?
மனிதத்தளைகள்!

சிறிய தவறுகள் –
சிறிய சுணக்கங்கள்

*சிறிய மறதிகள்*
*சிறிய சோம்பல்கள் – பின்போடல்கள்*
*சின்ன புறக்கணிப்புகள்*
*சின்னச் சின்ன கர்வங்கள்*
*இன்னும் சிறிய மயக்கங்கள் –*
*இவை இல்லாதிருந்தால்*
*கொல்லன் உலையின் எருமை மூச்சுகள்*
*இந்த நெஞ்சுக் குழியுள் பாரமேற்றாது.*

*கொஞ்சம் விழிப்பு –*
*கொஞ்சம் சுறுசுறுப்பு*
*கொஞ்சம் விடாப்பிடி – தொடர்ந்த செயல் –*
*இந்த இதயத் துடிப்பின் சத்தத்தை*
*எளிதாக்கியிருக்கும்.*

*ஆனால்,*
*அந்தக் கத்தி விளிம்பில்*
*இந்தப் பகற்கனவு சாத்தியமா?*
*பின் ஏது வாழ்க்கை இவனுக்கு?*
*நத்தைச் சுகம், எறும்புக்குத் தெரியுமா?*
*இனி என்ன செய்யலாம்?*
*ஊர்ந்து செல் –*
*வழுக்கி விழு*
*நனைத்துச் சும*
*விழுங்கு*
*முழுக் கசப்பையும் அவமானத்தையும்*
*விழுங்கு*
*விழுங்கு.*

❖

*1980*

## தவறிய பருவங்கள் ♦

*பனிப்பூக்களே,*
*பனிப்பூககளே,*
*ஏன் கொடுகிக் கொண்டிருக்கிறீர்கள்*
*உறைந்த கூதலா?*
*உங்களுக்கு முன் ஒரு பனிப்பாலையா?*

*பனிப்பூக்களே, பனிப்பூக்களே*
*ஏன் கொடுகிக் கொண்டிருக்கிறீர்கள்*

*இந்த நதி உறைந்திருக்கிறதா?*
*பார்வைக்கு*
*இது பனிப்பாளம்*
*கிட்ட வந்து தொட்டுப் பாருங்கள் –*
*இதன் கண்டிப்பும் இறுக்கமும்*
*ஒரு மெல்லிய ஓடுதான்.*
*உங்கள் தோலைப்போல் மெல்லியது.*
*உங்கள் இதயச்சுவர்போல்*
*துடிப்புடையது –*
*இந்த நதியினுள்*
*கைவிட்டுப் பாருங்கள்*
*நகச்சூடு –*
*98.4*° F
O° C *அல்ல*
*காதைவைத்துக் கேளுங்கள்*
*'களகள' வென்ற பிரவாகிப்பு கேட்கவில்லைய?*
*'டிக்டிக்' என்று*
*இதய வால்வுகள்*
*சப்திக்கவில்லையா?*
*இந்த ஒட்டை உடைக்கத்தான் தெரியவில்லை*
*உங்களுக்கும் எனக்கும்.*
*ஓ!*
*பனிப்பூக்களே, பனிப்பூக்களே!*
*இந்த நதி இனித் திரும்பிவராது.*

❖

*1980*

## ஒரு பிரியாவிடை ♦

உங்கள் சேட்டில்
ஒட்டியிருந்த தூசியைப்போல்
என்னைத் தட்டிவிடுங்கள்
போய் விடுகிறேன்.

உங்கள் ஏளனத்துக்கு இலக்காய் இருந்த
ஒரு காலிப்பயல்
பிடரியில் குதி அடிபட
ஓடிப்போகிறான்.
பார்த்துக் சிரியுங்கள்
இன்னும்
உங்கள் கோர்த்த கரங்களுக்கு வெளியேதான்
நீங்கள் அவனை வைத்திருந்தீர்கள்.
உங்கள் நெஞ்சங்களை
அவனால் அரவணைக்க முடியவில்லை
உங்கள் இனிய புன்னகையை
நீங்கள் அவனுக்கு அளிக்கவில்லை
உங்கள் பலம் பொருந்திய வியூகங்களின் முன்
அவன் என்ன
சாணம் உருட்டிய பீ வண்டு.

சில முகங்களே
சில முகங்களே
நீங்கள் என்னில்

ஏமாந்து போனீர்கள் என்பதை
உங்கள் வெறுத்த முகங்களிலும்
வெளிறிய பார்வைகளிலும்
என்றோ நான் அறிந்து கொண்டேன்
நான் போய் வருகிறேன்.
என் சுவடும் தெரியாது.

மாணிக்கங்களை இழந்து போகிறேன்
வளநதிகளை விட்டுச் செல்கிறேன்
அது என்வரையில்தான்
உங்களுக்கு நான்,
சனக்கும்பலில் ஒரு நொடிக்குள்
உங்களைக் கடந்து போய்விட்ட
ஒருகால் அல்லது ஒரு கை,
ஒரு பிடரி அல்லது முதுகு,
முகமற்ற ஒரு நிழல்

எல்லாம் ஒரு நொடியில்தான்
பின்னர் அதுவும் இல்லை.
ஒரு பெருவெளியின் சிறுமணல் கூட இல்லை
என் வெறுமையில்,
நான் அற்ற அந்த 2 x 5½வெளியில்,
அங்கு
இனி
ஒரு வெயில் சுடரும்
ஒரு மெல்லிய காற்று வீசும்
நான் போய் விட்டேன்
ஓம் ஓம்
உங்களுக்கு நினைவிருக்காது.

❖

*1980*

## மீண்டும் எழுந்திருக்கையில்

*எனது மயிர் பொசுங்கி விட்டது*
*எனது தோல் கருகிவிட்டது*
*எனது காதுச்சோணைகள் எரிந்துவிட்டன*
*இந்த ரணங்களோடுதான்*
*மீண்டும் எழுந்திருக்கிறேன்*

*இந்த ஊனங்களின்*
*தழும்புகளுடன்தான் நான் இனி வாழவேண்டும்*
*எனது மனவெளியோ*
*வெந்த வனம் போல் உள்ளது.*
*தீப்பிடித்துக் கருகிய புற்கற்றைகள்*
*இங்கொன்று அங்கொன்றாய் தெரிகிறது*
*இடையே சாம்பல் கலந்த மண்*
*அடி கருகிய புற்கற்றைகளிலிருந்து*
*இரண்டொரு பசும் முளைகளை*
*சின்னச் சின்ன பச்சைப்படர்கள்*
*தெரிகிறதா?*

*உற்றுப் உற்றுப் பார்க்கிறேன் –*
*இந்த மனவெளி இனியும் பசுமை பூக்குமா?*
*வெந்து தணிந்த இந்தக்*
*கரியும் சாம்பலும், வெளியும் –*

*இதனிடையேதான்*
*நான் இனி உலவப்போகிறேனா?*

❖

***1982***

## ஒரு ஞாயிற்றுக்கிழமை

*1*

*இன்னும் விடியவில்லை*
*இருள் மூடிக் கிடக்கிறது*

*அன்னை எழுப்புகிறாள்*
*அவசரமாய் அவசரமாய்...*
*தின்னும் பனிக்கூதல்!*
*சிறிதின்னும் கண்ணயர்ந்தால்*

என்னசுகம்  என்னசுகம்
இவள்  ஏன் எழுப்புகிறாள்

மண்ணாகிப் போன அந்த
மணியோசை கேட்கிறது
இன்னும் விடியாத
இரவின் குளிர் அறுத்துத்
தூரத்தில் பனிக்குளிரில்
தொங்குவது போல் மிதந்தும்
வீரித்தே என் காதில்
வீழுவதைப் போல் இடித்தும்

மண்ணாகிப் போன அந்த
மணியோசை கேட்கிறது

கண்கள் அரிக்கிறது
கடும் குளிரும் தைக்கிறது
அன்னை எழுப்புகிறாள்
அவசரமாய் அவசரமாய்
இன்னும் விடியவில்லை
இருள் மூடிக் கிடக்கிறது
இன்னும் சிறிதிங்கே
இனிய துயில் கொண்டால்
என்ன சுகம் என்ன சுகம்...
இவள் ஏன் எழுப்புகிறாள்...

**2**

பின்னல் குலைந்த இருள்
பிரிகிறது ... கரும் நூலில்
இன்னும் சில இழைகள்

இழுத்தது போல மங்கல்...
இன்னும் கலங்கிறது
இன்னும் தெளிகிறது

பின்னல் குலைந்த இருள்
பிரிகிறது... வேலிகளில்
சின்ன மணிகளைப் போல்
செவ்வரத்தை பூக்கிறது
இன்னும் தெளிகிறது
பின்னல் குலைந்த இருள்
பிரிகிறது... மென்மேலும்
சின்ன மணிகளைப் போல்
செவ்வரத்தை பூக்கிறது
அன்னை நடக்கின்றாள்
அவளைத் தொடர்கின்றேன்.
அன்னை நடக்கின்றாள்
அவளைத் தொடர்கின்றேன்.

*3*

எம் முன் பலபேர்கள்
செல்கின்றார்... எமைப்போல
முன்னே எழுந்திருந்து
முகம் கழுவி உடையணிந்து
வந்தவர்தான், நிரை நிரையாய்
வழிநெடுகச் செல்கின்றார்

எங்கே இவர் செல்கின்றார் – ஓ!
எங்கே இவர் செல்கின்றார்

மெல்ல நடந்தவர்கள்
விடியும் குளிர் தாங்கி
என்ன சுகம் பெறவோ
இந்நேரம் செல்கின்றார்

என்ன சுகம் பெறவோ
இந்நேரம் செல்கின்றார்

மண்ணாகிப் போன அந்த
மணியோசை மீண்டெழுந்து
என்ன அவசரமோ
இரைந்து பொழிகிறது

என்ன அவசரமோ
இரைந்து பொழிகிறது

*4*

அன்னை முன் செல்கின்றாள்
அவள் துயரைத் தீர்ப்பதற்கு
என்ன வழியுமில்லை...
ஆகையினால் முந்துகிறாள்...

மண்ணாகிப் போன அந்த
மணியோசை ஓய்கிறது

கன்னிமரி ஈன்றெடுத்த
கர்த்தரின் கோயிலிலே
அன்னை முழந்தாளில்

யான் ஒருத்தன் மூலையிலே
என்ன சுகம் என்ன சுகம்
இன்னும் துயின்றிருந்தால்

5

அன்னைப்போல் அன்னையர்கள்
அநேகம்பேர் அங்கிருந்தார்
எல்லோரும் முக்காடு
எல்லோரும் கரம்கூப்பி
எல்லோரும் முழந்தாளில்

எல்லோரின் கண்களிலும்
துன்பத்தை யார் விதைத்தார்

துயரத்தில் இதழ்வெருவி
இன்பத்துக் கேங்குகின்ற
இதயத்தின் நெடுமூச்சை
அங்கவதற்கு யார் ஈந்தார்

அவர்கள் இந்த வாழ்க்கையிலே
புண்பட்ட வெண்புறாக்கள்
புதர்களிலே வீழ்ந்துள்ளார்

துன்பத்தின் கேணி என்று
வாழ்க்கையினைச் சொன்னவர்கள்
இன்பத்தை எங்கு வைத்தார்
எட்டாத சொர்க்கமதில்

இன்பத்தை எங்கு வைத்தார்
எட்டாத சொர்க்கமதில்

அந்த ஒன்றையே நம்பி
அவர்கள் இங்கு வாழ்கின்றார்
அந்த ஒன்றுக்காகவே
அவர்கள் இந்த வாழ்க்கை எனும்
கண்ணீர் கணவாயில் *
கதறிப் புலம்புகிறார்

அந்த ஒன்றைச் சொன்னவர்கள்
அதிமேதை! ஏனென்றால்
அந்த ஒன்றைத் தள்ளி விடின்
இந்த மக்கள் இவ்வாறே
கண்ணீர்க் கணவாயில்
கதறிப் புலம்பிடுவார்...

துன்பத்தை ஏற்றுழன்று
துவளும் இவர் விழிகள்
துன்பத்தை மறுப்பதற்குத்
தொடங்கி விடின் பின்னங்கே
கண்ணீர்க் கணவாயில்
கதறுபவர் யார் கொல்லோ?

கண்ணீர்க் கணவாயில்
கதறிப் புலம்புவதால்
துன்பத்தின் ஓடையிலே
துளிகள் சொரிவதினால்
இன்பத்துக்காக
ஏங்கி நிதம் வாடுவதால்
எங்கள் வழிபாடு ஓர்
இனியதுயர்க் காவியமாம்

எங்கள் பிரச்சனைகள்
இவ்வுலகில் தீராவோ
எங்கள் பிரச்சனைகள்
இவ்வுலகில் தீர்வதற்கு

எங்கள் இறைவன் அதை
இயற்றித் தரவில்லையாம்

எங்களுக்கு அரிசி இல்லை
எங்களுக்கு வேலையில்லை

நேற்றுப் பகல் சோளம்
நேற்றிரவு தண்ணீர்
இன்று பகல் எதுவோ
இறைவனது சித்தம்

*6*

பூசை முடிகிறது அப்
பூசை முடிவினிலே
ஆசீவதித்தார் குரு
யாவரும் தொழிதேற்றோம்
வீதியிலே இறங்குகிறோம்

வீதியிலே இந்த வையம்
சோதியிலே கலந்து மிகத்
துரிதமாய் இயங்கிற்று

சைக்கிளும் கார்களும்
சவங்களும் ஓடோடி
எத்தனை காரியங்கள்
இயற்றுகின்றார் இயற்றுகின்றார்

எத்தனை வாகனங்கள்
எத்தனை கூக்குரல்கள்
இத்தனை சந்தடியில்
இத்தனை நெருக்கடியில்

சுமையினை இறக்கி வைத்த
சுகமுடன் பதுமையென
அமைதியில் கனிந்த முக
அன்னையர் செல்கின்றார்கள்

சுமையினை இறக்கி வைத்த
சுகமுடன் விழி மலர்ந்து
அமைதியாய்க் கனிந்தமுக
ஆண்களும் செல்கின்றார்கள்

இன்று முடிந்து போகின்றார்
இனியும் நாளை வருவார்கள்
இன்றும் இழந்த துயில் மீண்டும்
இழத்தல் நேரம் இதுபோல
மங்கற் போதில் வேலிகளில்
மலர்தல் கூடும் செவ்வரத்தை
அங்கு கேட்கும் மணியோசை
அவர்கள் காலில் சுவை கூட்டும்
இன்று சொரிந்த துயர்க்கவிதை
இனியும் கொண்டு வருவார்கள்

இன்று முடிந்து போகின்றார்
இனியும் நாளை வருவார்கள்.

❖

*1967*

---

* *கண்ணீர்க் கணவாய்:*

*.... பரதேசியாய் இருக்கின்ற நாங்கள் ஏவையின் மக்கள் உம்மைப் பார்த்து கூப்பிடுகின்றோம். இந்தக் கண்ணீர்க் கணவாயிலே நின்று பிரலாபித்து உம்மையே நோக்கி பெருமூச்சு விடுகின்றோம்...*
*–கிருபைதயாபத்து மந்திரம்*

**மண்ணும் மனிதரும்** ♦

*மண்ணே*
*உன்னை வாழ்த்தி நின்றனம்*
*மண்ணே யாங்களும் என்று மகிழ்ந்தனம்*

“பூமி எம்தாய்” என உன்னைப் போற்றினர்
பூமி எம்தாயென யாங்களும் போற்றுவோம்

பெண்களின் சிவந்த கன்னம் போல
எங்கள் வாசலில் ரோஜா பூத்தன

மங்கள் வெளியிலும்
மழையிலும்
காலைகள் சிந்தும் ஒளியிலும் சேர்ந்து புரளும்
அந்தப் பூக்களை நாங்கள் வியந்தனம்

எங்கே இருந்தன? எங்கே இருந்து – அவை
இங்கே மலர்ந்தன என்று வியந்தனம்

நீயே ரோஜாச் செடியும் ஆயினை
நீயே பசிய தண்டும் ஆயினை
நீயே இலைகள் நீயே மலர்கள்
நீயே முட்கள் யாவும் ஆயினை

உழுதே, உன்னை உறிஞ்சும் வேர்களின்
உடலும், உயிரும், யாவும்
இங்கு நீ எனக் கண்டனம்
நீயே இங்கு
உயிரென விளைந்ததும்
உணர்வென வளர்ந்தும்
வருகிறாயாதலின் வாழ்த்துதல் செய்வோம்

*2*

இன்னும் உன்னை வாழ்த்துதல் செய்வோம்
ஏனெனில் நித்திய இருப்பும் நீயே

எங்கள் பலாவின் அடியில்
தினமும் இலைகள் உதிர்ந்து கிடக்கும்

அருணன் தங்க ஒளியில் கிளையில் மீண்டும்
தளிர்கள் தோன்றித் தினமும் வளரும்

இந்த இலைகள் உதிர்ந்து மீண்டும்
இளகி அழுகி உன்னைச் சேரும்

இந்த இலையில் இருந்த நீயே
இன்னும் சென்று தளிர்ப்பாய் மீண்டும்

உதிர்ந்து மீண்டும் உயிரில் கூடி
ஒளியில் நிழலாய் ஊர்ந்து நீள்வாய்

வியந்தனம்
உன்னை வியந்தனம்
நீயே வினையும் விளைவும் என்று மகிழ்ந்தனம்

*3*

இன்னும் உன்னை வாழ்த்துதல் செய்வோம்
ஏனெனில் நீ உடனே உணர்ந்ததும் ஆனாய்

உன்னைக் கடந்தொரு உடலே இல்லை
உடலைக் கடந்தொரு உயிரும் இல்லை

உயிரைக் கடந்தொரு உணர்வே இல்லை
உணர்வைக் கடந்தொரு மனமும் இல்லை

மனதைக் கடப்பது மனதுள் மண்டிய
உணர்வுப் புதையலுள் உறைதலே என்றனம்

உணர்வுகள் புதை...
புதையப்.... புதைய...
உருவும் வடிவும்
உதிர்ந்து கரைந்து
மின்துகள் போன்ற வெளியின் ஓட்டமாய்
அந்த ஆதியைத் தரிசனம் செய்கிறோம்

அந்த ஆதியும் நீயே ஆனாய்
ஆதலால் உன்னை வாழ்த்துதல் செய்வோம்

மனதைக் கடப்பது மனதுள் புதைவதால்
மனதைக் கடத்தல் இல்லை என்றனம்

மனமும் உணர்வும் உயிரும் உடலும்
மண்ணே, எல்லாம் உனது லீலையே
மனம் எனும் ஆற்றலில் இன்னோர் ஆற்றல்
மலரினும், மண்ணே, அதுவும் உன் லீலையே.

இனிய மண்ணே, இதனை உணர்ந்ததால்
தனியே நாம் இனிச் சாதல் தவிர்த்தனம்
இனிய மண்ணே, இதனை உணராத்
தனிமைக்கு மாயை எனும்பெயர் தந்தனம்

மாயையின் திரைகள் மறையும் வேளையில்
மண்ணே, உனது மனம் எனும் ஆற்றலால்
உன்னயே நீயே உணர்ந்த தெளிகிறாய்

மண்ணே,
உன்னை வாழ்த்தி நின்றனம்
மண்ணே யாங்களும் என்று மகிழ்ந்தனம்.

❖

## வெள்ளிப் பூக்கள்

என்றோ முளைத்த வெள்ளிப் பூக்களும்
என்றோ கணன்ற நெருப்புத் துளிகளும்
இன்று மீண்டும் எட்டிப் பார்ப்பன

நினைவும்
நிகழ்வும்
தொடர்ந்து நீண்டு
மணலில் உதிரும் பாதச் சுவடென
நெருண்டு
நெருண்டு
நெருளும் வாழ்வில்

புதிய சுவடுகள் மேலும் புதைந்தன
புதைந்த சுவடுகள் தொடர்ந்து நெரிந்தன

புதிய சுவடுகள் பதியப் பதிய
புதைந்த சுவடுகள் மறைந்து போகுமோ
காலையில் உடுத்து வெளியே செல்வதும்
வேலைகள் முடிந்து மதியம் திரும்பலும்
மாலையில் நண்பர் வரவுக்காக
ஓடிச் சென்று
உறங்கும் இருளில் வீடு திரும்பலும்
என்று வெறிதே
நாட்கள் கழிய,
நாட்கள் தோறும்
வாழ்க்கை என்றோ வார்த்துத் தந்த
வெல்லக் கரைசலில்
பளிங்கு விளைந்துள்ள அருமையை
உணரத் தவறினேன்.

வழ்க்கை தந்த ரோஜாச் செடியில்
நாட்கள் தோறும்
நறுமலர் கோடி
பூத்து நிற்கும் பொலிவை உணர்ந்திலேன்
வெயிலோ புழுங்கும்
வேலித் தழைகளின்
குச்சு நிழல்கள் கோட்டுப் பின்னலாய்
நித்திரை செய்யும் நீண்ட தெருவிலே
சைக்கிளில் வருவேன்

சைக்கிள் ஒலியில்
நித்திரை கலைந்த நிழலின் பின்னல்கள்
வரிவரியாய் என்
மார்பிலும் தோளிலும்
திரைப்படமோட, சிறிது விரைந்து
வந்து திரும்பி
வளைவில் நிமிர்ந்ததும்.
அங்கே, அவள்தான் –
அம்மன் கோயில்
வெளியின் ஓரம் நிழலை விழுத்தும்
புளியையின் கீழே –
புதல்வரோடெனது
வழியிலே விழிகளை மலர்த்திய வண்ணம்

இடுப்பிலே இருந்த இளையவன் சிரிப்பான்
பொறுக்கிய பூவுடன் நிமிரும் மூத்தவன்
ஓடிவருவான் –
உதிர்ந்த புளியம் பூக்கள்
அவன் கைப் போதுள் இருந்து
கோர்த்த சரம்போல் மணலில் கொட்டும்
'என்னை
மலர் சொரிந்தோ இனிய மகனே உன்

அன்னை மகிழ அழைக்கின்றாய் நீ–'
என்ற நினைவு என்னுள் குதிரும்.

அந்த நினைவும்
அந்த வரவும்
அந்த வரவை அவள் எதிர்பார்த்து
நின்றபொழுதும்
நிழலும் வெயிலும்
என்றும் என்னுள் இருப்பதேயாயினும்
இன்று ஏன் திடீரென
இனிக்க நேர்ந்தது?

நினைவும் நிகழ்வும்
தொடர்ந்து நீண்டு
மணலில் உதிரும் பாதச்சுவடு என
நெருண்டு நெருண்டு
நெருளும் வாழ்வில்
புதிய சுவடுகள் பதியப் பதியப்
புதைந்த சுவடுகள் மறைந்து போகுமோ?

அப்படி நினையேன்,
அருமைத் துணையே
என்றும் தெரியும் வெள்ளிப் பூக்களை
என்றும் கண்ணில் படுமே அவைகளை
இன்றே புதிதாய் காண்பது போல
என்றோ
ஓர் நாள் இரவு
நம்
நெஞ்சம் கிளர்ந்து நினைவு தளிர்க்குமே!

❖

*1967*

## ஆக்காண்டி

ஆக்காண்டி ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய் –
கல்லைக் குடைந்து

கடலோரம் முட்டை வைத்தேன்
வைத்ததுவோ ஐஞ்சு முட்டை

பொரித்ததுவோ நாலுகுஞ்சு
நாலுகுஞ்சுக் கிரைதேடி
நாலுமலை சுற்றி வந்தேன்
மூன்று குஞ்சுக் கிரைதேடி
மூவுலகம் சுற்றி வந்தேன்

ஆக்காண்டி ஆக்காண்டி
எங்கெங்கோ முட்டை வைத்தாய்
கல்லைக் குலைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்

குஞ்சு பசியோடு
கூட்டில் கிடந்ததென்று
இன்னும் இரைதேடி
ஏழுலகும் சுற்றி வந்தேன்

கடலை இறைத்துக்
கடல் மடியை முத்தமிட்டேன்
வயலை உழுது
வயல் மடியை முத்தமிட்டேன்

கடலிலே கண்டதெல்லாம்
கைக்கு வரவில்லை
வயலிலே கண்டதெல்லாம்
மடிக்கு வரவில்லை

கண்ணீர் உகுத்தேன்
கடல் உப்பாய் மாறியதே
விம்மி அழுதேன்
மலைகள் வெடித்தனவே

ஆக்காண்டி ஆக்காண்டி
எங்கெங்கோ முட்டை வைத்தாய்
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்

வண்டில்கள் ஓட்டி
மனிதர்க் குழைத்து வந்தேன்.

கையால் பிடித்துக்
கரைவலையை நானிழுத்தேன்

கொல்லன் உலையைக்
கொளுத்தி இரும்படித்தேன்

நெய்யும் தறியில்
நின்று சமர்செய்தேன்

சீலே கழுவி
சிகையும் அலங்கரித்தேன்

வீதி சமைத்தேன்

விண்வெளியில் செல்லுதற்குப்
பாதை சமைக்கும்
பணியும் பல புரிந்தேன்

ஆனாலும் குஞ்சுக்கு
அரை வயிறு போதவில்லை
காதல் உருகக்
கதறி அழுது நின்றேன்

கதறி அழுகையிலே
கடல் இரத்தம் ஆயினதே

விம்மி அழுகையிலே
வீடெல்லாம் பற்றியதே

கடல் இரத்தம் ஆகுமென்று
கதறி அழவில்லை
வீடுகள் பற்றுமென்றும்
விம்மியழவில்லை

ஆக்காண்டி ஆக்காண்டி
எங்கெங்கோ முட்டை வைத்தாய்
கல்லைக் குலைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்

குஞ்சு வளர்ந்தும்
குடல் சுருங்கி நின்றார்கள்

பசியைத் தணிக்கப்
பலகதைகள் சொல்லி வந்தேன்

கடலை இறைத்துக்
களைத்த கதை சொல்லி வந்தேன்

வயலை உழுது
மடிந்த கதை சொல்லி வந்தேன்

கொல்லன் உலையிலும்
கொடுந் தொழிற் சாலையிலும்
எல்லா இடமும்
இளைத்த கதை சொல்லி வந்தேன்

சொல்லி முடிவதற்குள்
துடித்தே எழுந்து விட்டார் –
பொல்லாத கோபங்கள்
பொங்கிவரப் பேசுகின்றார்

“கடலும் நமதே அன்னை
கழனியும் நமதே அன்னை
கொல்லன் உலையும்
கொடுந்தொழிற் சாலையதும்
எல்லாம் நமதே” என்றார்
எழுந்து தடி எடுத்தார்
கத்தி எடுத்தார்
கடப்பாரையும் எடுத்தார்
யுத்தம் எனச் சென்றார்
யுகம் மாறும் என்றுரைத்தார்
எங்கும் புயலும்
எரிமலையும் பொங்கிவரச்
சென்றவரைக் காணேன்
செத்து மடிந்தாரோ?

வைத்ததுவோ ஐஞ்சு முட்டை
பொரித்ததுவோ நாலு குஞ்சு
நாலு குஞ்சும் போர் புரிய
நடந்து விட்டார் என்ன செய்வேன்
ஆனவரைக்கும்
அந்த மலைக் கப்பாலே
போனவரைக் க ாணேன்
போனவரைக் காண்கிலேன்

ஆக்காண்டி ஆக்காண்டி
எங்கெங்கோ முட்டை வைத்தாய்
கல்லைக் குலைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்

❖

*1968*

## பரவளைவுக் கோடு ♦

*அதிகம் நடந்து விட்டோம்*
*ஆவணிமாத வெயிலின் கொடுமை*
*மிகவும் களைத்து விட்டாய்*

*இந்த வழிசெல்வோம்*
*இலைகள் கலகலக்கக்*
*கொஞ்சம் வெயிலைக் குறைக்கும் அரசமரம்*

*எங்கள் அரசு இதனைவிடப் பெரிது*
*முந்தி நான் சொன்னேனே பாடல் நினைவிருக்கா.*[1]

*'பக்கத்தில் ஒரு கோயில் – அதன்*
*பக்கத்தில் ஓர் அரசு*
*சொர்க்கத்தின் வழிபோல இலை*
*சோவெனக் கலகலக்கும்*
*சற்றங்கே ஓர் ஆலை நின்று*
*சருகுதரும் கண்மூடி*

திக்கற்ற கன்றொன்று தாயைத்
தேடிவரும் வெயிலில்...'

அந்த வெயிலின் அழல்தான் இதுவும் – ஓ
இந்த வெயிலில் எதுதான் பிழைத்திருக்கும்

மக்கள் வங்கியின் வாசல் மதிலோரம்
வட்டில்களைப் பூத்து வாழை மடல் விரித்த
சூரியகாந்தி சுடுபட்டுக் காய்கிறது
நீர் கொஞ்சம் வீழ்ந்தால் –
அதுபோதும், நிறம்பெற்று வாழத் தொடங்கும்
அதுவரையில் சாக்காடு.

ஊரெல்லாம் என்றோ ஒருநாள் மழைபொழியும்
போதும் வெயில் என்று நாங்கள் புழுங்குகிற
வேளைவரை காத்து,
விடிய எழுகையிலே மாரி பெய்யக் கண்டோம்
மகிழ்ந்து குதூகலித்தோம்.

அப்போது,
இந்த அகன்ற கரவாகு வட்டையைப் பார்த்தோம்
மழைத்துளிகள் முத்துப்போல் பட்டுத் தெரித்தன
வெள்ளப் பரவும் என்றோம்

மற்றநாள் பார்த்தோம்
மழைநீரைக் காணவில்லை
புற்கள் அதன்மீது புதிதாக மூடியதைக்
கண்டு வியந்தோம்
கடவுளே, என்று சொன்னோம்.

ஈரச் சவசவப்பு
இன்னும் பெரிய மழை தூறத் தொடங்க
தொடர்ந்து பாடசாலைக்குப்

போக முடியாது புத்தகத்துடன் நாங்கள்
பாதிக்குமேல் நனைந்தோம் – என்ன பரிதாபம்,
ஏசி, மழைக்கு இடையில் திரும்பி வந்தோம்.

மாலையில் நாங்கள் வெளியே வரவில்லை
ஆலங் கிளைகள்பல அன்று முறிந்தனவாம்
சாமம் வரையும் சடசடத்தே மழை
கூரையில் கேட்க எங்கள் பாட்டி குறைதுயிலில்
'நாசமாய் போக, இது எத்தனை நாளைக்கோ?
மாசம் முழுதுமோ என்றாள்'
மனம் கசந்தோம்

காலையில் கண்விழித்தோம்
வாசல் கடந்ததுமே,
கோயிலடியின் கொழுத்தபசும்புல்லில்
ஊர்வதும் என்ன? வெயிலோ?
ஆசையிலே ஓடினோம் பார்க்க
உடம்பு சூடேறிற்று.
ஈரம் உலராத புல்லில், இளங்கதிரின்
சூடுபட என்ன சுகம்!
ஓ!
நான் சொல்வதனைக் கேட்க அலுக்கிறதோ?
ட்றாண்சிஸ்ற்றரைக் கேட்போம்
நீட்டு அதன் ஏரியலை
செய்தி முடிந்திருக்கும்
பாட்டுவரும், அந்தப்பக்கம் திரும்பிவிடு.

**2**

வேறெங்கு போவோம்? – பார்
வானம் விரிந்துள்ளது

ஆனியில் வெட்டி,
அறுவடை செய்தவர்கள் போனபின்,
அந்தப் புதைதாளின் ஒட்டுகள் மஞ்சள் நிறமாகி
வைக்கோல் இடையிடையே சிந்திக் கிடக்க,
திரளாய்ப் பசுக்கள் எல்லாம் வந்து நின்று மேய,
வரம்பு ஒன்றில் ஏறி நாம்,
தென்திசையைப் பார்த்தோம்
வடதிசையும் பார்த்து நின்றோம்.

'கண்படுவரை நீள்கரவாகு வட்டை' என்றேன்.
'அங்கே அடிவானம் அண்டுதுபார்' என்று சொன்னாய்

அன்று,
தலைமழை பெய்த அடுத்தநாள் என்று நினைக்கிறேன்
ட்றாக்டர் இரைச்சல் ஒன்று
இந்த வயலில் எழுத்திரும்பிப் பார்த்து நின்றோம்.

'மந்தப் பொழுதில் மலைகளைப்பார்' என்று சொன்னாய்.

'இந்த வயலூடு இவ்வாறே இவ்வாறே நாம் நடந்து சென்றால்,

அந்நீலச் சிகரங்களையுடைய
ஊவா மலைத்தொடரில் ஊன்றலாம் கால்" என்று சொன்னேன்.

நீயோ சிரித்தாய்
நெடுகச் சிரித்து வந்தாய்
ஓமோம் பிழைதான்
உணர்ந்தபின்னர் நான் சிரித்தேன்.

"வாழ்வினிலே அன்றுசெல்லும் அடிவானத்தை
வசப்படுத்தப் பயணமுற்ற மனிதர் உள்ளே
நாமும் இருதுளியானோம், நடந்துசெல்வோம்..."

என்று நான் முன்னர் எழுதியதைச் சொன்னேன்
நன்று என்று சொன்னாய்.
திரும்பி நடந்து வந்தோம்.

மீளத் தொடர்ந்து விரியும் புதுவானின்
நீளம் அளக்கும் நினைப்போ எனக்குளது?

நீளங்கள் இல்லை
அகலங்கள் இல்லை
வளைவு – வளைவு – வளைவு!...
வலம்புரி, பத்திரமாக் கல்லூரி மைதானத்தில்
சைக்கிள் இரவு பகலாக ஏழு நாள் ஓடி
வளைத்து வளைத்தான் எனச் சொன்னாய்.
ஆயினும் நான் அவனைக் காணவில்லை.
அப்போ நான் கேரளத்தில் பெத்தனி ஹில்லில்
சரோஜினியின் நீளவிழியின் வளைவை நினைந்திருப்பேன்.

ஆடிவேல் நீர்த்தம் கொழும்பிலே
அப்போ ந ான்
போபஸ் ஒழுங்கைப் புதரில் குடியிருந்தேன்.
கோயிலுக்குப் போனோம் – இரவில் குமரிகளைக்
காணுதற்கென்று.
சிவத்தக் கமிசணிந்து,
தோள் தெரிய நெஞ்சைச் சுமந்த ஒருத்தியின்பின்
ஓடித்திரிந்தோம்.
ஒரு பயனும் இல்லையென வாடி
Marry-go-round அடியில் வந்து நின்றோம்.
வேடிக்கையாக
வெளிச்சத்தில், தென்னைமர ஒலைகளின்கீழே
Marry-go-round ஓடப், பார் என்றாய்.
பார்த்தேன்.
பவள இதழ் வரத்
தோள் தெரிய நெஞ்சைச் சுமந்த அவளேதான்

யாரோ ஒருவனைப் பார்த்து நகைபுரிந்தாள்.
வேகிற்று நெஞ்சு
வெறித்தோம்.
Marry-go-round ஓடிச் சுழன்றது.
ஒவ்வோர் முறையும் அவள்
மாறிச் சுழன்று வரும்பொழுதெல்லாம்
தென்னை ஓரமாய் நின்ற அவனை உவகை பொங்க
நேசமாய்ப் பார்த்துச் சிரித்தாள் – நிலைகுலைந்தோம்.
ஞாபகமோ?
பின், அதிலே நாமும் சுழன்று வந்தோம்.

ஆடிவேல் போன அடுத்தடுத்த மாதத்தில்
ஊருக்கு வந்தேன் – அதுவும் ஓர் உற்சவந்தான்...
......
கோலாலம்பூரில் நாங்கள் குடியிருந்தவேளையில்,
சைக்கிள் விளையாட்டில் மிஞ்சி நின்ற சீனனைக்
கேயில் தெருவிலே சந்தித்தேன்.
வா என்றான்;போனேன்.
“மரணவளைவு” என்று
போர்ப்பலகை தொங்கும் பெரியகூடாரத்துள் சென்றோம்
குனிந்து.

திரையை விலக்கினான்
அங்கே பெருங்கிணறு ஆழக்கிடந்தது.
“நாளை ஆரம்பம், எனினும் இன்றுன்னுடன்
ஓடலாம்” என்று உதைத்தான் சைக்களினை
ஏறினேன்.
மோட்டார் எழும்பிற்று.
அந்த வளைந்த சவரில் மடமடவென்றொலித்து
(வளைந்து வளைந்து) பறந்தது.
நான் பயந்து “விழுந்து விடுவோமோ” என்றேன்.
“விசர் உனக்கு” என்றவன் கீழே இறங்கி,
எனை மட்டும் உந்திவிட்டான் மேலே.
உளறி அழுது நான் கெஞ்சினேன்

*எனினும் கிணற்று வளைசுவரில்*
*ஒன்றும் பிசகாது சைக்கிள் ஓடிற்று.*
*வளைவு வளைவு வளைவு வளைவு.*
*ஓ! உசச்ம் இறக்கம் – இறக்கம் ஓ! உச்சம்.*

*வளைவு வளைவு வளைவு வளைவு...*
*ஒன்றும் பிசகு இல்லை*
*ஓடினேன்... ஓடினேன்...*
*.......*
*கண்விழித்தேன், அஃதோர் கனவு. அதனைநான்*
*முந்தியும் சொன்னேனா? (இல்லை? சரிபோவோம்...)*

***3***

*பொழுது படுகிறது*
*எங்கே இனிப் போவோம்?*

*நாம் நடந்த தூரம் நமக்கு தெரிகிறது*
*பாதி வழியில் பயணம் தொலையாது*
*போகின்ற தூரம் புரியாப் பறவையோ நாம்?*

*காலை புறப்பட்ட கடுகதி பஸ் இன்னும்*
*ஆள் மூச்சிடுவதுபோல் அதிர்ந்து நின்று*
*கீழ்மூச்சு மேல்மூச்சு வாங்கிக் கிளம்பும் அதோ...*

*சீச்சி புகை, புழு, சீவனே போனதுபோல்*
*ஏன் இரைந்து போகிறது?*
*என்னசெய்வோம்?*
*வந்திந்தச் சூரியனைப் பார்.*
*புழுதி ஊடு சுடருமதன்*
*ஊதாக் கதிர்களிலே உட்பொருளைக் காட்டுகிறேன்.*[2]

*ஊதா நிறப்பொழுது;*
*அந்த ஒளியினிலே*
*தூதும் இருளும் துலங்கிக்கலங்கையிலே*
*நீ பிரிந்து சென்றாய் – நிழல்படிய*
*நின்னுடைய கால்களிலே, முன்வந்த காரின் ஒளிபட்டு*
*மேல் உயர்ந்த நீண்ட நிழல் என்ற விழி மூட*
*நான் கலங்கிப் போனேன்.*
*நனைந்தது என் நிழலும்.*
*போய்விட்டாய் நெஞ்சில் புதைந்த பொருள் அறியேன்.*

*வாகனங்கள் சைக்கிள்... வரும்போகும்...*
*கண்துடைத்துப் பாதையின் அடுத்த பக்கக்*
*கடையினுக்குப் போயினேன்.*
*இஞ்சி நன்றாய்ப் போட்ட வெறுந்தேனீர் தா' என்றேன்,*
*தந்தான்.*
*குடித்துச் சகலதுமே அறிந்தவன்போல அமர்ந்தேன்.*
*பின், மின்குமிழின் சோதியைப் பார்த்து,*
*தலையைச் சொறிந்தபடி வாசலுக்கு வந்தேன்.*
*எரிவாணமொன்றெங்கோ*
*புஸ் என்றே ஓடிப் பொரிந்து வளைகையிலே*
Nice *என்றார் யாரோ.*
*அதில் நான் துணுக்குற்று வானத்தைப் பார்த்தேன்.*
*வளைந்திறங்கும் வெள்ளிகளை*
*ஆர் எண்ணக்கூடும், அடா!*

❖

***1969***

---

*1. சசியின் 'அழைப்பு'*
*2.* T.S. Eliot. 'Wast Land' – I will show you... in a handful of dust
*(ஒரு பிடித் தூசுக்குள் உன்றன் துயரத்தைக் காட்டுவேன்.)*

## இருட்டுக் குரல்கள் ♦

*ராத்திரியில்*
*மின்விளக்குத் தூரத் தெரிகையிலே*
*சாக்கடையின் பின்னும்*
*சகதியிலும் மங்கலிலும்*
*வாகை மரத்தின் வரிநிழலில் உள்ளும் நான்*
*வீட்டுக்குச் செல்கையிலே காதில் விழுங் குரல்கள்:*

*“நாங்கள் ஏன் இந்த நகரத்து முன்னிரவில்*
*மற்றவரைப் பார்த்து வருந்தித் திரிகின்றோம்”*

*“பார்த்தால் நகரம் பகல்போல் தெரிகிறது*
*கோர்த்ததுபோல் கார் வெளிச்சம்*
*சைக்கிள்களே கூட*
*தட்டுத் தடுமாறி ஓடும் சனக்கூட்டம்*
*இத்தனைக்கும் மத்தியிலே இந்த இளங்காற்று*

*வாவிப் புறத்திலதோ மங்கல் வெளிச்சங்கள்*
*மீன் பிடிக்கும் தோணிகள்*
*நீரில் விளையாடிச்*
*செல்லும் குளிர்காற்றுச் சேட்டைத் தடவுகையில்*
*என்ன சுகமாக இவர் நடந்து செல்கின்றார்.*

*இந்தச் சுகம் ஏன் எமக்குக் கிடைக்கவில்லை?*
*சேட்டுக் கசங்கி, தலைமயிரும் குழம்பி,*
*ஊத்தை முகத்தோடு உலவுகிற எங்களுக்குக்*
*காற்றும் சுகம் தருமா?*

*காற்சட்டையின் மடிப்பு*
*சற்றும் குலையாது சப்பாத்தொளி மின்ன*

நெற்றிப் புருவம் நிமிர்ந்து நேர்நோக்க
அற்புதமாய்ச் செல்கின்றார்.

எம்மை அவர் அறியார்
என்பதினாலோ நாம் ஏக்கமுறுகின்றோம்?
எங்கள் முகத்தில் இருளா உறைந்துளது?
எங்கள் முகத்திலோர் இங்கிதமும் இல்லையா?
முற்றும் மழுங்கி, முகமும் தெரியாத
சிற்றெறும்புக் கூட்டமோ நாங்கள்?

இவர்களுடன்,
ஒட்ட முடியாது ஒதுங்கித் தனிமையிலே
சாக்கடையின் பின்னும் சகதியிலும் மங்கலிலும்
நின்று இரங்கி, நினைந்து மனவேக்காட்டில்
பொங்கிச் சினந்து பொருமிப் புடைக்கின்றோம்.

நாங்கள் இவரை அழிக்கப் பிறந்தவர்கள்
நாங்கள் பழியில் நனைந்து பிறந்தவர்கள்
எங்கள் பிறப்பே இதற்கென்றமைந்தது
எங்கள் பிறப்பே வெறுப்பில் எழுந்தது

நாங்கள் ஓர்காலம் அசுரராய்த் தோன்றுவோம்,
அப்போது இவரின் தலையைத் திருகுவோம்.”

ராத்திரியில்
மின்விளக்குத் தூரத் தெரிகையிலே
சாக்கடையின் பின்னும்
சகதியிலும் மங்கலிலும்
வாகை மரத்தின் வரிநிழலின் உள்ளும் நான்
கேட்ட குரல் இவைகள் – கேட்டுப் பயந்துதினம்
ஓட்டம் எடுக்கின்றேன். உண்மையில் யார் இவர்கள்?

❖

***1969***

## வெளியார் வருகை ♦

நேற்று முழுதும் அலைச்சல்
இரவு போய்ச் சாப்பிட்டேன்
பின்னர் படுக்கையில் சாய்ந்து விட்டேன்...

மூத்திரம் பெய்ய இடையில் முழித்தெழுந்தேன்
வார்த்தடியை நீக்கிக் கதவைத் திறக்க
– இருள் போர்த்தித் தெரிந்தது

கோடிக்குள் போகையிலே
வானத்தை அண்ணார்ந்து பார்த்தேன்
வடிவாக வெள்ளிகள் பூத்து மினுங்கின
மூத்திரம் பெய்யும்பொழுது
பிறகும் ஒருமுறை
அண்ணார்ந்து பார்த்தேன் – அடடா
– ஓ அடடா!

வெள்ளிகள் கீழே விரைந்திறங்கி வந்தனவே
நம்பொணாது
கண்களை தேய்த்துக் கசக்கினேன்
உண்மைதான்
வெள்ளிகள் கீழே விரைந்திறங்கி
எங்களது
தென்னைகளின் மேலே திரியத் தொடங்கினபார்;

பூரணையைப் போன்ற புதுச் சிவப்புக் கோளங்கள்
உச்சந்தலையில் ஒரு சிறிய கற்றைமயிர்
பக்கமிரண்டும் பசுவின் சிறுகொம்பு
"இப்படித்தானோ இருப்பன வெள்ளியெல்லாம்?"
மூத்திரம் பெய்தபடி
என்னுள் முனகுகையில்,
"ஓம்" எனப்
பின்வீட்டுக் கணபதியர் ஒப்புகையில்,
தென்னோலையின் வளைந்த சிறுநுனியைத்
தொட்டபடி
வந்த கோளத்தின் வடிவம் பெருக்கிறது
தோளும் முகமும் சுடர்ந்து பொலிகிறது
மார்பும் புயமும் வயிறும் தெரிகிறது

"இப்படித்தானோ இருப்பன வெள்ளியெல்லாம்?"
மூத்திரம் பெய்தபடி மேலும் முனகுகையில்

“ஓம்” என
மீண்டும் கணபதியர் ஒப்புகையில்
தென்னோலையின் வளைந்த சிறுநுனியைத்
தொட்டபடி
இன்னமும் வெள்ளிகள்
இன்னமும் வெள்ளிகள்
மேற்குக் கிழக்காக
கிழக்கு மேற்காக
இன்னமும் மூத்திரம்
இன்னும் இன்னும் மூத்திரம்
மூத்திரம் பெய்து முடியவே இல்லை!

விடிகிறது
இந்த வெள்ளி வீரர்கள்
எங்கு படிந்தனரோ?
பாலையோ? அன்றிப் பனிவெளியோ?
எந்த மலையிலோ? எந்தக் கடலிலோ?
எங்கள் ஊர் மேலும் இறங்கி இருப்பாரோ?
வாரிச் சுருட்டி படுக்கையை விட்டெழுந்து
மண்டபத்துள் வந்தேன்
விடிந்து வரும் பொழுதில்
எல்லாக் கதவும் திறந்து கிடந்தன
எல்லாக் கதவும் திறந்தே கிடப்பதால்
வெள்ளிகள் இங்கேதான்
வந்திறங்கி விட்டாரோ?

வாசலுக்கு வந்தேன்
வளவெல்லாம் நோக்கியபின்
கூரையினைப் பார்த்தேன்.
ஒருவன் அங்கே கால்குத்தி
நிற்கின்றான்
வெற்றி நிலத்தவனோ?
காக்கி உடைணிந்து துப்பாக்கி வைத்திருந்தான்

போர்க்கவசம் ஒன்றைத் தலையில் புனைந்திருந்தான்
பார்த்துப் பயந்தேனோ?
பார்க்காதவன் போல வீட்டுள் புகுந்தேன்
பிறகு வருகையிலே
கூரையின் ஓரம் அயலவர் கூடிநின்றார்
வீரனின் காலை அயலவர் கூடிநின்றார்
வீரனின் காலை ஒருவர் பிடித்திழுத்தார்
வீரன் விழுவானோ?
அல்லால் மெனிதுவக்கால்
'பட்பட்' என்றெங்களை பட்டாஸ் கொழுத்துவானோ?

ஊமை நிசப்தம்
ஒருகணம் நீள்கிறது
ஆட்கள் சுவரை வளைத்துக் குவிந்தார்கள்
நானும்
படியால் நடந்து நெருங்குகின்றேன்
ஆரோ ஒருவர்
அல்வாங்கு வைத்திருந்தார்
"என்னத்துக்குக் கிந்த அலவாங்கு?"
எனக் கேட்டேன்
"பாரும் இதோ "என்றார்கள்.
பாதி முகம் அழிந்த
பக்கக் குடல் சிதறி
வீரன்
அழுகும் வெறும்பிணமாய் வீழ்ந்துள்ளான்.

ஆர் ஆராரோ வீட்டில்
அதற்கிடையில் கூடிவிட்டார்.
மாவடியின் கீழே வடிவான கூடாரம்,
ஊதுவத்தி பற்றி தடித்த ஒரு மனிதர்
சாமிபடத்திற்குப் பூசை நடத்துகிறார்
"எங்கே என் பின்ளை?"
எனக் கேட்டேன்

என்மகனைத் தந்தார்கள்
என்தூக்கித் தவசியிடம் செல்கின்றேன்.
“என்ன இவையெல்லாம்? ”
என்கிறேன் இங்கிலீசில்
“எல்லாம் வெளியாரை ஏற்பதனால் – ”
என்றவரும் இங்கிலீசில் சொன்னார்.
“இனி என்ன செய்வது? ” என்றேன்
பெண்டு
பிள்ளை யாவரையும்
பொலிசில் ஒப்படைத்து
வந்து நீர் வீட்டுக்குக் காவல் இரும் ” என்றார்.

சிந்தித்தேன்.
நாங்கள் ஒருவனைத் தீர்ந்துவிட்டேன்
நாங்களேதான்
இந்த நமனைப் பலி கொண்டோம்
வந்தால்,
இனியும் அவர்களை மாய்ப்போம் நாம்
இந்த வழியே
இனி மரணத்துள் வாழ்வோம்.

“குத்துவோம், வெட்டுவோம்.
கொத்தி விழுத்துவோம்.
இந்த வழியே,
இனி மரணத்துள் வாழ்வோம்.
என்றேன்...
விழித்தேன்...
“எழும்புங்க கோப்பி” என்று
வந்தவளைப் பார்த்தேன் மருண்டு.

❖

*1970*

**மண்ணில் முளைக்கும் ஒரு**
**வால் நட்சத்திரம்** ♦

*இளஞரை*
*நீங்கள் எங்கே போகிறீர்?*

காலி வீதிக்கு முழுவதும்
உங்களின் ஆயிரமாயிரம் முகங்களைக் காண்கிறோம்.

கண்டிப் புறத்திலும்
யாழ்ப்பாணத்திலும்
உங்கள் தலைகள் உயர்ந்தும் தாழ்ந்தும்
செல்லும் நீண்ட திசைகளைக் காண்கிறோம்.

பேராதெனியா
கட்டுப்பெத்த
புறக்கோட்டை
போபஸ் ஒழுங்கை
பஸ் நிறுத்தங்கள்
ரயில் நிலையங்கள்
பண்டாரநாயக்க விமான நிலையம்
கூட்டுத் தாபனக் குறுக்கு மூலைகள்
எங்கும்
நீங்கள் ஓர் இராட்சச உடலில்
சொட்டும் குருதியில் துளிர்த்த கணங்களாய்
வந்து தோன்றிய வளர்வதைக் காண்கிறோம்.

இளைஞரே
நீங்கள் எங்கே போகிறீர்?

பாண்டிருப்பிலும் உங்களைப் பார்க்கிறோம்
கோயிலடியின் கிணற்றுக் கொட்டிலே
கவடா வீட்டின் செங்கற் கட்டிலே
தலைமயிர் குழம்பித்
தசைகள் முறுகித்
தெரியும் உங்களைத் தினமும் பார்க்கிறோம்

மட்டக்களப்பு பஸ்சில் செல்கையில்
ஊர் ஊர் தோறும்

றோட்டுக் கரையில்
எங்கும்
நீங்கள் – ஓர் இராட்சச உடலில்
சொட்டும் குருதியில் துளிர்ந்த கணங்களாய்
உற்பத்தியாகி உள்ளதைக் காண்கிறோம்.

'மக்கள் எழுச்சி என்னு ஓர்
வால் நட்சத்திரத்தை நாங்கள் வானிலே
காத்து நிற்கையில்
எங்கள் காலிடை வளர்ந்த உங்களை
மறந்தே போயினோம்.

மக்கள் எழாத வரையில்
எந்த நட்சத்திரமும் நமக்கில்லை என்பதால்
ஒவ்வோர் இரவும்
ஒவ்வோர் சாமமும்
முப்பது வருஷமாய் முழித்திருக்கின்றோம்
இரவின் குளிரை இதமாய் கடக்க
மூடும் இமைக்கு முட்டுகள் நல்க
நாங்கள் பலப்பல யுக்திகள் செய்தோம்.

தணலை மூட்டினோம்
சமையல்கள் செய்தோம்
கோப்பி போட்டோம்
கூத்துகள் ஆடிப் பாட்டும் பாடினோம்
எனினும்
அந்த – வால் நட்சத்திரம் வரவே இல்லை.

காரணம் என்ன?
திரும்பிப் பார்க்கிறோம்
"வால் நட்சத்திரம் வானில் வரும்" எனச்
சொன்னவர் எங்கே?
திரும்பிப் பார்க்கிறோம்

அவர்களோ –
செஸ் ஆடுகிறார்கள்
வொவி ஃபிஷ்ஷரும், ஸ்ப்பாட்ஸிகியும்
பின்னால் நின்று பிச்சை இரக்க
அவர்கள் ஒரு செஸ் ஆடுகிறார்கள்.

பாவம்
இன்று அவர்கள் பழுத்த கிழவர்கள்
மண்டையோடு வழுக்கை யாயினார்
வழுக்கை விழாத மற்றவர்களும்
நரைத்துப் போயுளார்
நாட்பட நாட்பட
அறளை பெயர்ந்து
ஆட்டமே கதியென மயங்கி விட்டார்கள்.

“வால் நட்சத்திரம்,
எங்கே?” என்று அவரை இறுதியில் கேட்டோம்

“வந்து போனதே வானத்தில் நேற்று” என
கறுப்பும் வெள்ளையுமான அக்காய்களை
நகர்த்திச் சொன்னார்...
நாங்கள் கசந்து வெளியிலே வந்தோம்
வெளியில் வந்ததும்

–” வானத்தைவிட்டு,
இம் – மண்ணில் நாம் ஓர்
நட்சத்திரத்தை நடுவோம் வாரீர்”–

எனும் குரல் கேட்டுத்
திரும்பிப் பார்க்கிறோம்

காலி வீதியில்
கண்டிப் புறத்தில்

பாண்டிருப்பில்
யாழ்ப்பாணத்தில்
புறக்கோட்டையில்
போபஸ் ஒழுங்கையில்
கூட்டுத் தாபனக் குறுக்கு மூலையில்
மட்டக்களப்பு பஸ் செல்லும் பாதையில்
ஊர் ஊராய்
கூட்டங் கூட்டமாய்
எங்கும்
நீங்கள் – ஓர் இராட்சச உடலில்
சொட்டும் குருதியில் துளிர்ந்த கணங்களாய்
உற்பத்தியாகி ஊர்வலம் ஆயினீர்.

ஓமோம்
நாங்கள் இப்போது உணர்கிறோம்.
நாங்கள் வானில் ஓர் நட்சத்திரத்தைக்
காத்து நிற்கையில்
எங்கள் காலிடை வளர்ந்த உங்களை
மறந்தே போயினோம்

நீங்களோ
எம்மிலும் நிறைய உழன்றதால்
வானத்தை விட்டு
இம் – மண்ணிடை அந்த
நட்சத்திரத்தை நாட்டத் துணிந்ததோ?

எங்கே போகிறீர் ஓ! என் இளைஞரே
எங்கே போகிறீர்?
எங்கே போகிறீர்?

❖

*1971*

## மதுக்கடைக்குப் போகிறோம் ♦

நாங்கள் மதுக்கடைக்குப் போகிறோம்
நீலமின் விளக்கின் கீழே
நெடிதுயர்ந்த மாடிகளின் ஓரம்
மனிதரிடை
வாகனங்கள் தாவி விரைந்து செல்லும் சந்தடியில்
நாங்கள் மதுக்கடைக்குப் போகிறோம்.

எங்களைப் பார்த்து ஏன் வருந்துகிறீர்
உங்கள் முலையிலிருந்து ஊட்டியபாலை
நாங்கள் துப்பி வெகுநாட்களாயிற்று.

நீண்ட கிளாசில் பியரை நிறைத்துள்ளோம்
பொங்கும் நுரையுள் இதழ்கள் புதைக்கிறோம்
மீண்டும் சிகரெட்டை விரலிடை வைத்தே
மெல்ல உறிஞ்சுகிறோம்
வீணை ஒலிகளை
புகைவடிவாகக் கரையவிடுகிறோம்.

நீங்கள் எங்களை சாதுக்கள் ஆக்கினீர்
நாணத்தைப் போர்த்தி நடக்கப் பழக்கினீர்
நாங்கள் சாதுக்கள் அல்ல என்பதை
நிரூபிக்கவே நிமிர்ந்து நின்று
உமது முகத்தில் புகையை உமிழ்கிறோம்.

மீண்டும் கிளாசில் பியரை நிறைத்துள்ளோம்
வெண்நுரை ததும்பும் பொன்னிறபியர் –

கட்டித்த பனிப்பாறைகள் மெல்ல கரைகின்றன.
மனதின் இருட்டு மூலையில்
ஒளித்து வைத்த அழுக்குத் துணிகளை
வெளுத்து எடுக்கிறோம்.

எங்களை நாங்கள் கண்டு கொள்கிறோம்.
எங்களை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.
எங்களைப் பார்த்து ஏன் வருந்துகின்றீர்

உங்கள் வாழ்வுநெறி
உங்கள் பண்பாடு
உங்கள் கோயில் உங்கள் பள்ளிவாசல்,
உங்கள் தேவாலயம் உங்கள் பன்சாலை
உங்கள் சடங்குகள், சம்பிரதாயங்கள்
அனைத்திலும் நீங்கள் எங்களை இழந்தீர்கள்
அனைத்தையும் நாங்கள் மறுதலித்தேம்.
எங்களைப் பார்த்து ஏன் வருத்தப்படுகிறீர்.

நீல மின் விளக்கின்கீழே
நெடிதுயர்ந்த மாடிகளின் ஓரம்
மனிதரிடை
வாகனம் தாவி இரைந்து செல்லும்
சந்தடியில்
நாங்கள் தடம்பிடித்துச் செல்கிறோம்.
யாருக்கும் பயப்படாமல்
யாருக்கும் குறைந்துவிடாமல்
நாங்கள்
எங்கள் காலில்
நடக்க விரும்புகிறோம்.

❖

*1972*

## 71 ன் பின்னர்

நம்பிக்கை உள்ளவர்கள் மேலே நடக்கட்டும்
வெற்றுச் சுலோகங்களை வீணே இடுவதேன்?
நம்பிக்கையைத்தான் நாங்களும் தேடுகிறோம்
கொண்டு வந்தது வெறும் பனிக்கட்டி
இடைவழியில் உருகி
விரல் இடுக்கில் ஓடிற்று.

மயிர்க்கொட்டி
இலையை வேகமாக உண்ணும்.
அதனால் கூட்டுப்புழு சோம்பேறியாவதில்லை
மயில் இறகை எடுத்து நீங்கள்யாரும் செருகலாம்
கோஷங்களை எடுத்து யாரும் கொளுவலாம்
நம்பிக்கைத் தாளை பார்சலில் ஒட்டலாம்
ஆனால்
பார்சலுக்குள்ளே என்ன உள்ளது?
அமாம்
கூட்டுப்புழுவை
'சோம்பேறி' என்றேசாதே!

❖

*1973*

## பாதிகள் ♦

*இரவில்*
*தனியே படுக்கையில் கிடப்பது எப்படி?*
*உடலின் நெடுங்கோட்டில்*
*வகிடு பிரிந்த இருப்புநிலை எங்ஙனம்?*

*மனித முழுமைக்கு*
*இரண்டு கையும்*
*இரண்டு காலும் என்று*
*எந்த வியாசபகவான்*
*எந்த மேருமலையில்*
*எந்த*
*யானைத் தந்தத்தால் கீறிப்போனார்*

*சியாமிஸ் இரட்டையரை*
*இரட்டையர்தான் என்று*
*எந்தக் கருப்பை நிபுணன்*
*கத்தியை வைத்தான்?*

*ஸ்ப்பைரோக்கைரா*
*பரமீசியத்தின்* Conjugation

ஒரு வளர்குழாயினால் மாத்திரம் என்று
எந்த இலிங்கத்துவம் இயற்றி வைத்தது?

சிவன்கோயில் மூலத்தானத்தில்
குழிந்த அம்மியுள் குழவியை
நட்ட நிறுத்தி
எந்த ஞானப்பிச்சை,
உற்பவம் இதுவே என
உரைத்துப் போனான்?
உள்இடும் கருவி ஒன்றோ
உற்பவப் பொறிமுறை?

ஓ! உயிரினக் கூர்ப்புத் தெய்வமே
உன் குறைமதியை என்னென்பது?
உன் I.Q.100 க்கும் கீழ்!
நீயே சொல்,
நெஞ்சோடு நெஞ்சும்
வயிறோடு வயிறும் பிசைந்து மசைந்து
நாலுகால் நாலுகை மனிதமுழுமை
பாதியாய் எப்படிப் படுக்கையில் கிடக்கும்?

அர்த்த நாரீஸ்வர தத்துவந்தானும்
$\frac{1}{2} + \frac{1}{2} = 1$ என்ற
பாதி நோக்கிய பின்னச் சமன்பாடே

ஓ! கூர்ப்புத் தெய்வமே
திரும்பிப் போ –
ஆமாம்
திரும்பித் தொடங்கு.

❖

*1976*

Chromosomes Good bye
Mutations farewell

*எங்கள் சாயலை நாங்களே இணக்கினோம்*
*புருவப் பிறைமேல் கூர்ங்கோணநெற்றி*
*நெற்றியில் நீவிய தலைமயிர்க்கற்றைகள்*
*கற்றைகள் தொங்கும் கழுத்தும் பிடரியும்*
*நாங்களே எங்கள் சாயலை நடத்தினோம்.*

Chromisomes Good by
Mutations farewell

*குரங்கு முகத்து* Homo sapiens *ஐ*
*எத்தனை நூற்றாண்டின் முன்னே இணக்கினாய்*
Cro-magnon *மனிதன்,*

நேரிய நெற்றியும்
கூரிய நாடியும்
நீங்கள் கொடுத்த வரங்களே.
இலைகுழையும், தோலாடைகளும்
எங்கள் வரிசைகள்.

கிரேக்க ஞானிகள்
உரோமா வீரர்கள்
ஹெலனிச வார்ப்பின் சுண்ணக்கலவைகள்.

மோனாலிசாக்கள்
இராக்போசனங்கள்
மறுமலர்ச்சியுக Photostatsசுகள்.

பிக்காசோ கியுபிசத்தின்
முகமற்ற முகங்கள்
உருவமற்றஉருக்கள்
புறத்தை கூறிட்ட அகத்தின் பாச்சல்கள்
இதோ நாங்கள்
வெளியின் சிதறலாய்
வைரத்தின் மின்னலாய்

புருவ பிறைமேல் கூர்ங்கோண நெற்றி
நெற்றியில் நீவிய தலைமயிர்க் கற்றைகள்
கற்றைகள் தொங்கும் கழுத்தில் பிடரியும்
எங்கள் சாயலை நாங்களே இணக்கினோம்.

Chromosomes Good bye
Mutations farewell

❖

*1978*

## அழைப்பு

தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்
பாதி இரவினிலும்
பட்டப்பகலின் அனலினிலும்
மோதித் தெறித்து

மெல்ல முனகி அழுவதுபோல்
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்.

பக்கத்தில் ஒரு கோயில்
அதன் பக்கத்தில் ஒரு அரசு –
சொர்க்கத்தின் வழிபோல
இலை சோவெனக் கலகலக்கும்.
சற்று அப்பால் ஆலைகளில்
சருகுதிரும்.
இடைவெளியில்
திக்கற்ற கன்றொன்று
தாயைத் தேடிவரும் – அப்போதும்,
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்.

கடலருகே நிற்பேன்,
ஊரைக் காவலிடும் தென்னைகளில்
படரும் இருள் தூரத்தில்
அஞ்சிப் பறக்கும் சில பறவை
எங்கோ தூரத்தில் கேட்டதுபோல்
குரலும் அது கேட்கும்
என்குழந்தை நினைவெல்லாம்
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்.

❖

*1966*

## இன்று இரவு

இன்று இரவு சொஸ்த்தமாய் இருப்பேன்
இன்று இரவு இறைவனை நினைக்கமாட்டேன்
இன்று இரவு, கரிய தென்னைகள்
தூண்களாய் தாங்கும வானத்தில்
வெள்ளிகளைப் பார்த்துப்
பெருமூச்செறிய மாட்டேன்

இன்று இரவு
“நித்திரை பாதி, நினைவுகளும் பாதி ” என
விளக்கை அணைக்காமலே
கட்டிலில் கிடந்து
உழன்று, உழன்று, உழன்றபின்,
திடீரென விழித்து,

வெளிச்சத்தின் தனிமையைக் கண்டு
பயப்பட மாட்டேன்.

இன்று இரவு, இருளில், சாமத்தில்
படுக்கையில் கிடந்து நெஞ்சின் ஆழத்தில் விழுந்த
பள்ளத்திலிருந்து கரையேற முடியாமல்
தவண்டை அடிக்க மாட்டேன்.

அந்தப் பாரச்சுமை எதுவும் இராது,
இன்று இரவு மிதப்பேன்.
வானத்து மேகங்களில் மிதப்பேன்
வெள்ளிகளிடையே,
விண்கலத்தில் பயணம் செய்வேன்,

அவள் நின்று நிமிர்ந்து
பாதி விழியிலும், பாதி மொழியிலும்,
அல்ல,
பாதி விழியிலும், பாதி இதழ் அசைவிலும்
என்னை அண்ணார்ந்து பார்த்து
“போய் வருகிறேன்” என்று சொன்ன
அந்த வேண்டுதலை,
அந்த இறைஞ்சுதலை,
எனக்கு மட்டும் சொன்ன
அந்த ரகஸிய farewell ஐ
நினைத்து, நினைத்துப் பறப்பேன் –

ஆமாம்,
இன்று இரவு சொஸ்த்தமாய் இருப்பேன்,
இன்று இரவு இறைவனை நினைக்க மாட்டேன்.

❖

*1980*

கன்னி கட்டும் போதே
பூக்கள் உதிர்ந்து விடுகின்றன.
கர்ப்பம் தரித்த மறுகணமே
கருச் சிதைவு நிகழ்கின்றது.

மூளியாய் சிலவேளை முளைகள் தெரிந்தாலும்
திடீரென
துவாலை இறைத்துக் கட்டி விழுகின்றது.
திடீரென
துவாலை இறைத்துக் கட்டி விழுகின்றது.
ரணவாடை வீசுகின்றது.
முட்டைக்குள் கோழிக்குஞ்சு
சிறகு ரோமங்களுடன் மரணித்துப்

போகின்றது.
ஆனாலும்
நீ என்னைப் பாடச் சொல்கின்றாய்.

தெருவில் பிணங்கள் நாறுகின்றன,
பூட்டை ரவைகள் உடைக்கும் பொழுதில்
வெண்புறாக்கள்
தலைகெழிய வீழ்ந்து
சிறகொடியச் சுருண்டு கிடக்கின்றன
பையன்கள் சொல்லாமல் போகின்றார்கள்
கரையில் பிணங்களை தேடச் சொல்கிறார்கள்
கரையில் ஒதுங்கிய பிணங்கள்
கடலில் கொட்டப்பட்டவை என்றும் சொல்கின்றார்கள்
ஆனாலும்
நீ என்னைப் பாடச் சொல்கின்றாய்.

குருதி உறைந்த பாடல்கள்
பிணங்கள் அழுகும் பாடல்கள்
இருள்
கன்னங்கரிய புகைகளாய்
தலைமேல் கவியும் பாடல்கள்
கருச்சிதையாமல்
மூளியாய்
துவாலை இறைத்துக் கட்டி விழாமல்
நெஞ்சைப் பிளந்து
குரல்வளையில் இடறி
நாவில் வெடிக்கின்ற காலம் ஒன்று வரும்
அப்போத கேள் –
இப்போது அல்ல

❖

*1984*

## வெளிப்பு

காற்று அசையவில்லை
மேகம் கப்பியிருந்த நிலவு
சற்று வெளிப்பட்டிருக்கிறது
சிறிது மேலுயர்ந்து.
இருண்ட வெளியின் லேசான மினுக்கம்
தெளிவற்ற மரக்கிளையில் சிறிது வெளிச்சம்.

ஆனாலும் காற்று அசையவில்லை
உன் நினைவுகூட அப்படித்தான்
தேக்கம்.
முன்நகர முடியவில்லை
மேல் உயரவும் முடியவில்லை
விளிம்புவரையும் நிறைந்துள்ளதுதான்
எனினும் தேக்கம்

இந்த நாட்களில்
எதிர்பார்ப்புகளும் இல்லை, ஆவலும் இல்லை
எந்தப் பரபரப்பும் இல்லாமல்
உனது படிகளில் ஏற
இப்போது முடிகிறது என்னால்
உன்னைக் காண்பது
மற்ற எவரையும் காண்பதைப் போல்தான்
இந்த இனிய
ஆறுதல் தரும் நம்பிக்கையுடனும்
மனதின் நிர்சலனத்துடனும்
இன்று உனது படி ஏறினேன்
திரும்பி வருகையில்
உனக்கு "ச்சேரியோ" சொல்லுகையில்
செந்தளிப்பான புன்னகையுடன்
நீ என்னை கௌரவித்தாலும்
ஏமாற்றம்
உனது இதழ்களின் கடையோரம்
இருண்டிருந்ததோ எனவும் அஞ்சினேன்...

மீண்டும் நிலவை
மேகம் கப்பியுள்ளது
கதிரை தனியே
பனியில் தோய்ந்து வெளியே கிடக்கிறது
நான் மீண்டும் போய் அமரலாம்
காற்று அசையாத தேக்கத்தில்
மேகத்தை விட்டு விலகும் நிலவினால்
மினுக்கம் மீண்டும் உண்டாகும் என
எதிர்பார்த்து.

❖

*1985*

## இனிப்புகளும் கசப்புகளும்

இனிப்புகளும் கசப்புகளும் எத்தனையோ உண்டு
ஊமை நிலாவில்
காகங்களின் கூட்டில்

குயில்கள் நொந்து நொந்து முட்டையிடும்
மண்டையோட்டின் மூட்டில்
குடிசைகள் தீப்பற்றும்
பொட்டலங்களோடு சனங்கள் புறப்படும்.

ஊரை விழுங்கிய புடையன்
நாக்கை நீட்டி
எல்லைக் கிராமங்களின்
ஓரங்களை நக்கும்
இருந்திருந்து
வேட்டைக்கு பயந்த சிறுத்தைகள்
கற்பன் பாய்க்குள் ஒளிக்கும்.

மேகத்துள் இருந்து,
கணியன் பூங்குன்றனும்
அல்லாமா இக்பாலும்
ஓதுவதும் கேட்கும்.
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

..........................................
"முதலில் நான் ஒரு மனிதன் –
இரண்டாவது ஓர் இந்தியன்
மூன்றாவது ஓர் முஸ்லிம்..."

..........................................
இப்படியாக,
இனிப்புகளும் கசப்புகளும் எத்தனையோ உண்டு.

❖

*1985*

## இப்போது ♦

*இப்போதெல்லாம்*
*பூனைகள் எந்நேரமும்*
*குட்டிகளை கவ்வி திரிகின்றன*
*ஆள் அரவமற்ற*
*இடுக்கு வழிகளில்.*

*வேட்டை வாளிகள்*
*இப்போது*
*வீட்டுச் சுவர்களில்*
*களிமண் கூடு கட்டி*
*பூசுவதில்லை.*
*காட்டருகில்*
*கற்குகையின் மூட்டுகளில்*
*ஈயத்தை வார்த்து*
*இறுக்கி விடுகின்றன.*

*தூக்கணம் குருவிகூட*
*இப்போது*
*நிலக்கீழ் பொந்துகளில்தான்*
*அடைகாக்கின்றன.*

*ஏனென்றல்.........மன்னிக்க,*
*இவை எனினும்*
*பிழைக்கட்டும்.*

❖

***1986***

## எமது பாடுகளின் நினைவாக

யேசுவே,
உமது திருப்பாடுகளை
இந்தப் தபசு காலத்தில் தியானம் செய்கிறோம்.
உமது கைகளை பின்னால் மடக்கிக் கட்டினார்கள்
எனினும் எம் ஆண்டவரே
மடக்கிக் கட்டிய கயிற்றினாலேயே
உம்மை உயரத்தில் தொங்கவிட்டார்களா?
தொங்கவிட்டு
எரிபுகையை உம்மை
சுவாசிக்கச் செய்தார்களா?
உமது ஆண் உடம்பின் துவாரத்தில்
கம்பியை ஒட்டினார்களா?
உமது கண்களிலும மலவாயிலும்
மிளகாய்தூள் தூவினார்களா?
உம்மை கற்பழித்தார்களா?
உம்மை கற்பழிக்கச் செய்தார்களா?

என் யேசுவே,
உமது அங்கியை களைந்து,
முள்முடி தரித்து,
சாட்டையால் ரத்தம் பீறிட அடித்தார்கள்.
உமது திருக்கைகளிலும்,
உமது திருப்பாதங்களிலும்,
ஆணியை அறைந்து சிலுவையில் ஏற்றினார்கள்
உமது விலாவை ஈட்டியால் குத்தி
பிளந்தார்கள்,
எனினும் எம் ஆண்டவரே.
உம்மை கண்ட துண்டமாய் வெட்டி
உமது இரத்தத்தை உறிஞ்சிக் குடித்தார்களா?
உமது கண்களைப் பிடுங்கினார்களா?
உம்மை தீயில் பொசுக்கினார்களா?
உம்மை எரியும் நெருப்பினுள் எறிந்தார்களா?
உம்மை நாய்போல் ஓடவிட்டு
துப்பாக்கியால் சுட்டார்களா?

ஓ, என் யேசுவே,
உமது சிலுவையால் இந்த உலகத்தை இரட்சித்தீர்,
எமது சிலுவைகள் எத்தனை உலகங்களை
இரட்சிக்க வல்லவை?

பிதாவே, அந்த யூதர்கள் அறியாமல் செய்தார்கள்,
இந்த யூதர்களும் அறியாமல் செய்கிறார்கள்.
இவர்களது இம்சையும் கொடுமையும்
எங்களுக்கு விடுதலையை தரும் என்பதை
அறியாமல் செய்கிறார்கள்... ஆமென்

❖

*1986*

## பிள்ளைக்கறி ♦

*சாப்பிடக் குந்துகிறேன்*
*பீங்கான் நிறைய அவித்த ரத்தம்*
*நிமிர்ந்து அவளைப் பார்க்கிறேன்,*
*அசைவற்றுப் போன என் விழிகளில்*
*அவள் எதனைப் பார்க்கிறாள்?*
*பாடசாலை வெண்புறாக்கள்*
*தெருவில் சடசடக்கும்*
*நிறைமதியம்.*
*சந்திக்கு சந்தி*
*காக்கிச் சட்டைகள் துப்பாக்கிகளுடன்,*
*கரும்பச்சை வாகனங்களின் யுத்த நெருக்கடி*
*முற்றுகை – ஓட்டம் – முகமூடி –*
*தட், தட், ...பட்....பட்...*
*சற்று இடைவெளி*
*தலை உயர்ந்த எண்ணுகையில், திடீரென,*
*படீச் – படீச் – படீச் .... எஸெம்ஜி,*
*சரி முடிந்தது.*
*கொக்கு நாரைகளுடன்*
*எத்தனை குருத்து வெண் புறாக்களோ?*
*ரத்தப் பூக்களில்*
*இந்நேரம் ஈமொய்த் திருக்கும்*
*குனிந்து மீண்டும் உண்ணப் போகையில்*
*மீண்டும் அவித்த ரத்தம்!*

❖

***1985***

**காவல் அரண்கள் ♦**

*மீட்கப்பட்ட தமிழ் மண்ணில்*
*எனது சைக்கிள் உருண்டோடும்.*

கடல் மூச்சின் வாடைக் காற்று
எனது மூடியையும்
எனக்கு மேல் ஓடிக் கழியும்
தென்னை முடிகளையும்
வகிடு அழித்து மயில் தோகையாக்கும்
முன்னிரவிலும்
பின்னர் ஓர்
நள்ளிரவிலும்,
தெருவிளக்கின் மதிலோரம்
ஏந்திய துப்பாக்கிகளும்
இரண்டு விழிகளும்
தெரியும்.

வெறிச்சோடிய தெருக்களின் பகற்பொழுதில்
பழுத்த இலைகள் உதிர்ந்துகிடக்கும்
மங்கல் மூலைகளில்
மணற் சாக்குகளுடன்
மூன்று புறமும்
துப்பாக்கி முனை தெரியும்.

மீசை கறுக்காத
இளம் வைரங்களில்,
தமிழ்
ஆசைக் கனவெலாம் விழிகொள்ளும்

எனது சைக்கிள்
உருளும்,
இன்னும் உருளும்.

❖

*1985*

## ஆனையிறவு முகாம் ♦

*அந்திபட வந்தடைந்த*
*வாகனங்கள் – ஒரு மைல்,*

அடையாள அட்டையை பரிசீலிக்கும்
சிறிலங்கா இராணுவம்
கோடிழுத்த மீசையின்
கீழிறக்கச் சுழிப்பில்
வரவழைத்த கடுகடுப்பு.

பெருவெளியின் உறுமல் காற்று
ஆளைத்தள்ளும்
பறக்கும் மணற் பருக்கைகள்
முகத்தைப் பிய்க்கும்.
முதுகுகாட்டித் தளம்பும் வரிசையின்
கால்இடை வேஷ்டியும் கலைந்த தலைமயிரும்
காற்றில் பறக்கும்
கீழே எதிரில்,
உவர் சதுப்பில்
கனரக வாகனச் சுவடுகளின்
காய்ந்த தடங்கள்.

மேலே உயர,
மணற்சாக்கு கவியலும்
முட்கம்பிச் சுருளும்,
மரக்கிளைகளிடை
சிவப்பு ஓட்டுக் கூரைகளும்.

மனம் சினம் கொள்ளும்,
முகம் விறைத்துத் திரும்புகையில்,
தூரப் பெருவெளியும்
இடையில்
உவர் சதுப்புக் கரைகளும்.

❖

*1985*

## சரத்முத்தெட்டுவேகம் ♦

பல்லாண்டாய்,
உன்னைப் பக்கம் பக்கமாய் புரட்சி
படிக்கலாம் என நாங்கள்
காத்திருந்த காவியமே
நீ
திடீரென முடிந்த சிறுகதையானாய்.

கௌரவர்கள் மத்தியில்
வில் ஒடித்த விதுரனே,
நீ வாழ்ந்தவரை,
நீதான் உன் நாட்டின்
கடைசி மனச்சாட்சி
நீ வாழ்ந்தவரை,
நீதான்,
இந்த மைஇருட்காட்டின்
ஒரே மின்மினி.

மின்மினி,
காட்டைக் கொழுத்தும் என
யாரும் கருதவில்லை,
எனினும் உனது வெளிச்சத்தில்
பேரினவாதப் பூதத்தின்
பிராண்டல் தெரிந்தது...

அனுராதபுரம், அறந்தலாவை,
கொக்கிளாய் நாயாறுகளைக் கூடநீ
தாங்கிக் கொண்டாய்,

ஒடுக்குமுறையின் உக்கிரங்களுக்கு எதிரான
வக்கிரங்கள்
என அவற்றை வர்ணித்தாய்
எயர்லங்கா
விமானக் குண்டு வெடிப்பும்,
தபால்
(தொலை தொடர்பு அஞ்சல்)
நிலையத் தகர்வும்
உன்னை தொடை நடுங்கச் செய்தனவெனினும்,

வாழ்ந்திருந்தால்,
வடமராட்சித் தாக்குதலை எதிர்த்து,
வட்டமிட்ட இந்தியக் கரும்பருந்தின்
ஒப்பந்த நகங்களுக்கு
வண்ணம் பூசி
இந்து சமுத்திரத்தில்
சோவியத் வியூகத்திற்கு
துணை போயிருப்பாய் யெனினும்,

நீ வாழ்ந்தவரை
நீதான்
இந்த மையிருட் காட்டின்
ஒரே மின்மினி,
நீ வாழ்ந்தவரை
நீதான் உன் நாட்டின்
கடைசி மனச்சாட்சி.

❖

*1988*

---

குறிப்பு: சரத் கொலை செய்யப்பட்ட வாரத்தில் எழுதி, பின் இத் தொகுப்புக்கு நிறைவு செய்யப்பட்டது.

## எல்லைகளில் ஒரு நள்ளிரவில் ♦

*நள்ளிரவு பயமில்லை*
*நாங்கள் துணிந்து நிற்போம்*

*எல்லையை காக்க வருகிறாராம்*
*காக்க வருகிறாரா, தாக்க வருகிறாரா?*
*எல்லாம் அவர்க்கு ஒன்றே*
*என்ன கொண்டு வருகிறார், தெரிகிறதா?*

*பெட்ரோல்கலன், அணைப்பு, பெரிய பை...*
*அலவாங்கு!*
*நில்லுங்கள் அங்கே – நெருங்கி வராதீர்*
*எல்லையா! – எல்லை எது? ...எங்கள் எல்லைகள்*
*வீடுகள் கல்விய சர்ப்ப வியூகமல்ல*
*உச்சி வகிடும் அல்ல*
*அவை, ஒன்றினுள் ஒன்றூர்ந்த*

மண்டை ஓட்டின் என்பு மூட்டுகள்.
இரண்டு கைவிரல்களும்
ஒன்றிறையினுள் ஒன்று கோர்த்தவை.
ஒரே பொரு வேலியின்
உள்ளும் புறமும்
முக்காடும் குங்குமமும்
மூன்றுவிரல் பூச்சும், ஐந்தொழுகைத் தழும்பும்,
இந்த எல்லையை எவர் காக்கமுடியும்
எங்கள் இருவரையும் தவிர –
கல்முனையில் உங்கள் காரியங்கள் தெரியும்
காரை தீவிலும் தெரியம்,
மாளிகைக் காட்டிலும் தெரியும்.

கடைசி அணியையும் சுழற்றியவர் நீங்கள்
கடைசிப் பலகையையும்
கடைசிக் கிடுகையும்
காவியவர் நீங்கள்
ஊரின் நடுவில் உறங்குகிற உங்களுக்கு
எல்லையில் உள்ளோரின் இடர்கள் புரிவதில்லை
நீங்களும்தான்.... நீங்களும்தான்.

ஒரே பொதுவேலியின்
உள்ளும் புறமும்
நிற்பவர், தங்களுக்கே, நெருப்புவைக்க மாட்டார்கள்
மற்றவர் எதற்கு?
தயவு செய்து போய்வருக
நள்ளிரவு!
பயமில்லை
நாங்கள் துணிந்திருப்போம்.

❖

*1988*

போல் நல்லநாயகம்
கனடா போய் இருப்பாய்
வாழ்க நீ –
உன்னை தமிழ் ஈழம் மறவாது.

நெட்டைச் சதை உருவம், நிமிர்ந்த நடை
நடுவினிலே
மொட்டை பளபளக்கும்
முதிர்ந்த பெருந்தோற்றம்

கல்முனைப் பிரஜைகுழு, கண்ட முதல் தலைவ,
இத்தாலிச் சஞ்சிகைக்கு நீஈந்த பேட்டி! –

"நாற்பது தமிழ் இளைஞர் –
நற்பிட்டி முனையிலிருந்தும்,
துறை நீலா வனையிலிருந்தும்
சுட்டும், அடித்தும், துரத்தியும்

*சிங்கக் கமாண்டோக்கள் சிறைப்பிடித்த*
*நாற்பது தமிழ் இளைஞர் –*

*தம்பட்டையூரின் சரிந்த மணல்மேட்டில்*
*தங்கள் சவக்குழியை தாங்களே வெட்டினார்,*
*வெட்டிய குழிகளில் வீழச்சுடப்பட்டார்*
*அரை உயிரும் குறை உயிருமாய்*
*அங்கு புதையுண்டார் "*

*இந்தச் செய்தி இடித்த இடியிலே*
*அதிகாரிகள் அதிர்ந்தனர்*
*இரவிரவாய்*
*இராவணன் மீசையிடை*
*தம்பட்டையூரின் சரிந்த மணல்மேட்டில்*
*கடல் அன்னை ஓலமிட, கரிய தென்னை கலக்கமுற*
*பிணங்களைத் தோண்டி, பெரிய ட்ரக்கில்*
*கொண்டு சென்றார்.*

*நீண்ட வழியெல்லாம்*
*அந்த நிணங்கள் நாறியதை*
*ஊர்கள் பல அறியும்*
*உண்மையை நிரூபிக்க*
*நீ சென்ற போது நிணம் நாறிய*
*வெற்றுக் குழிகளே மிஞ்சி இருந்தன – (அடையாள*
*அட்டை சிலவோடு)*

*கைதானாய் –*
*காலத்தை இழுத்தடித்து*
*பொய்வழக்கு போட்டார் – புகழோடு நீ மீண்டாய் –*
*வாழ்க நீ*
*உன்னை தமிழ் ஈழம் மறவாது.*

❖
***1987***

## சமாதானச் சாக்கடை

சமாதானச் சாக்கடையில்
தமிழ்ப் புறாக்களும்
முஸ்லிம் புறாக்களும்
ஏழெட்டு நாட்களாய் குந்தி
எச்சமிடும்.

வானில் லொட லொடத்து,
இலங்கை – இந்திய
ஒற்றைக் கருந்தும்பி
ஒவ்வொரு நாளும் வந்து போகும்.

காரை தீவின் கரியும் சாம்பலும்
மாளிகைக் காட்டில் மறு அரங்கேற்றம்.
ஒரே ஒரு குறை –
மாளிகைக்காட்டு பள்ளிவாயல்களில்
விக்கிரகங்கள் இல்லை – தகர்ப்பதற்கு!

ஆள் அரவ மற்று
வெறிச்சோடிய வீதிகளில்
சந்திக்குச் சந்தி
மணற்சாக்குகளை அடுக்கி
இந்திய துப்பாக்கி வீரர் இருக்கையிலே,

ஆங்காங்கே,
அந்திவரை ஆட்கடத்தல்
இருபுறமும்,
அந்திபட, சவப்புதையல்
இருபுறமும்,
இந்த நிலையில்,
சமாதானச் சாக்கடையில்
தமிழ் புறாக்களும்
முஸ்லீம் புறாக்களும்
ஏழெட்டு நாட்களாய் குந்தி
எச்சமிடும்.

❖

*1998*

## மரியாதை உயிர்ச்சுவடும் விலகிச் செல்லும் மையங்களும்

*நீ வந்திருக்கிறாய்.*
*நான் எழுத வேண்டும்.*
*ஏன்?*
*நீயே எனது மையமா?*

*நிலவும் ஒரு வழிப்போக்கனும்*
*நினைவிருக்கிற தல்லவா?*

*உணர்வின் மையம் என*
*ஒன்று உள்ளதா?*

நீ எனது மையமாய் நேர்வதற்கு முன்னால்,
முன்னால், மிக முன்னால்,
வேறு சில மையங்கள் வேர் விடுவதற்கும் முன்னால்,
பதினொரு வயது முதல்
என்னை ஊடுருவிய
ஒரு தாடிவாலா இருந்தான்.
என் ஆசானும், அன்பனும்,
என்னில் அளவற்ற
நேசத்தைப் பொழிந்த நிமலனும்...
...போனான்... அவன் போனான் –
பிள்ளை கொடுத்துப் பிரிந்த காதலன் போல்
என் நெஞ்சில் ஓர் ஊமைக் குழந்தை அழ அழ
அவன் போனான்... போனான் காண்.

இன்னும் அவன் நெஞ்சில்
இருக்கின்ற போதுதான்...

> ...“ஊ என்று குழல் ஊதி உறைகின்ற பனிராவில்
> போகின்ற ரயில்மீது போம் என்னை அறிவாயா? –
> அங்கே
> நீ என்ன துயில்வாயா?
> சாய்கின்ற போதுன்றன் சதிராடும் இளநெஞ்சின்
> மாயங்கள் பலகோடி வலை பின்னும் கனவுன்றன்
> பாய் கொண்டு வருமல்லவா – அதில்
> பாயும் என் நினைவல்லவா?

என்று இதயச்
சத்தமாய் என்னுள் சடைந்த மையமும்
வந்தது...
வந்தது போலவே
சென்றது, ஒரு சிலிண்டர் அடியுடன்.
நொந்தென்ன?...
நோவடங்கி,

மையமழிந்து
மரணித்துப் புல் முளைத்த
பின்னரும், நெஞ்சை பிடுங்கும் சில வேளை.

என்றாலும் என்ன?
எழுகின்ற புல்லிடையே
செங்கழனிப் பூக்களும் சேர்ந்து மலருமன்றோ!

"பூவிழி இமையா புனைவுறு களிமண்
பாவையாய் ஆண்டு பயின்று நீ ஈண்டு
மீன் விழி சுழற்றி விறல் அடு கூத்தின்
நடை எனை நயத்தல் மறப்பதெங் கொல்லோ!
எனினும்,
இகந்த பல்லாண்டின் இழுநுகம் சுமந்த
தழும்பினை உன்னி வான்
புகுந்தாள் நினைவில் புரளுமென் நெஞ்சே!..."

என்று நான் பழைய
இழைகளில் பின்னியதும்
இட்ட காட்டின் இடையே முளைத்த
செங்கழனி மையமொன்றை
கண்ட திகைப்பில் அன்றோ!
இட்ட காட்டின் இடையில் இன்னும்
செங்கழனிப் பூக்கள் சிலிர்த்து மலர்வதனை
என்னதான் செய்ய முடியும் இவனால்?

"பளபளென்ற சிவப்பு நிற பரல் கல்லில் நீர் ஓடும்
நடைநடையே நடையதுவாய், நடையினிலே காலிரண்டு
விடமுடியா ஒரு நினைவில் விளையுமொரு மனத்திரையில்
கடல் அலைகள் மடிநோக்கி கரையிருந்து மீள்வனவே..."

என்று எனது,
பாதி உறக்கப் பாதி விழிப்பு
Surrealist படிமங்களும்
நெஞ்சினது
இட்ட காட்டின் இடையில் முளைத்தவைதான்.
இட்ட காட்டின் இடையே இன்னும்
செங்கழனிப் பூக்கள் சிலிர்த்து மலர்வதனை
என்ன செய்ய முடியும் இவனால்?

“நெஞ்சுள் அனுங்கும் ஊமைக் குழந்தை
நிறைந்து ததும்பும் ஆழக் கடலின்
கரையில் என்ன மடிவு? – அந்த
அலையில் என்ன நொடிவு? ...”

என்று நான்
கரையின் அலைகளில்
கரணம் அடிக்கையில்தான்
நீ வந்து சேர்ந்தாய்.
நிறைந்து ததும்பும் ஆழக் கடலில்
தோணிகள் ஓட்ட துடுப்புகள் தந்தாய்...

..... “நாங்கள் இரு தும்பிகள் பாடிச் சென்றோம்
நாங்கள் இரு பறவைகள் பறந்து சென்றோம்
எங்கும் திரிந்தோம் – புல்வெளி – வயல் – காற்று
எங்கும் பறந்தோம் – கல் – மணல் – கடல் –
விண்மீன்...”

என்று நான் முன்னர்
எழுதியது நினைவிருக்கும்.

..... “என் நண்பர் மிக இனியர், சுடுசொல்லை அறியார்
கண்ணீரின் துளி போல காலம் எனும் நதியில்
கலந்திடவே உயிர் செய்த காதல் உரு ஆனார்...”

என்று நான் உன்னை
ஓர் நாள் இரவு பாடிய
நீர் வளையங்களை நீ மறக்க மாட்டாய்
நீர் வளையங்கள் இன்னமும் நீள்கின்றன,
எனினும் மையம் மாறிற்று.

முருங்கைப்பூ உதிர்ந்த ஒழுங்கையில்
உயர்ந்த கம்பத்து மின்விளக்கு வீழ்த்திய
இலை நிழல் வரிகளினூடே
நடந்த நடைகள்
சித்திரமாய் பதிந்த திருப்பங்கள் சேர்ந்தன.

வெள்ளி பூத்த ராவில்
கரிய தென்னைகளைப் பார்த்து
பெருமூச்செறியும் காலங்கள் வந்தன.

காய்ந்த பனை ஓலை இடுக்கில்
நீர் சொட்டச் சொட்ட
நனைந்து,
நனைந்த ஷேர்ட்டை பிழிந்து
உலரவிட்டு,
வெறும் மேலுடன் பள்ளி வாங்கில் குந்தி,
“இதுவும் என் விதி”
என எழுதிய
நாட்களும் வந்து நகர்ந்தன.

அந்த மையத்தை அகற்றக் கோரி
தெய்வத்திடம் நான் சேர்ந்ததும் உண்டு.

எனினும்,
இறுகிக்கொண்டு வருகின்ற நாளந்த வாழ்வில்

தசையின் விறைப்பை,
நரம்பின் உறைவை,
மனதின் நிரோதிப்புகளை
ஒரு துளிச் சாராயம் இளக்கிற
அந்த கருணை மிக்க பொழுதுகளில்
(நேற்று இரவுகூட)
இந்த கடைசி மையம்
என் கண்ணீரைக் கேட்கிறது.

பிந்திய நாட்களில்,
எனக்கு அபயமளித்த சில
அதிகார முகங்களும்,
எனக்கு பிச்சை போட்ட சில
தாராளக் கரங்களும்
என்னை உறுத்துகின்றன.
கடன்காரர்களும்
கரும்பச்சை வாகனத் துப்பாக்கிக் காரரும்
நான் குட்டி போட்டி அரை டசின் வயிறுகளும்
என்னை மரணக்குழிக்குள் தள்ளுகின்றன.

சரி...
நீ இப்போ வந்திருகிறாய்.
நேற்று உன்னைப் பார்க்கையிலே,
என் மகனின் நினைவு வந்ததோர் கணம்.
நீ தூக்கிய பாலகன்தான் –
எனினும்,
காலப் பரவளைவில் ஆளை ஆள் கடக்கையில்,
நீயும் அவனும் ஒரு புள்ளியில்
ஒரு சிறிய
காலப் பின்னத்தில் –
வாழ்க்கைக் கனவுகளைப் பொறுத்தவரை –
முன்னேறும் முனைவுகளைப் பொறுத்தவரை,
நீயும் அவன் போல நெடுந்தூரம் செல்கின்றாய்.

*நானோ,*
*இன்னமும் இங்கேதான் குந்திக் கொண்டிருக்கின்றேன்,*
*மாயங்கள் பல கோடி வலை பின்னிய கனவுகளும்,*
*மீன் விழி சுழற்றிய விறல் அடு கூத்துகளும்,*
*பளபளென்ற சிவப்புநிற பரல் கல்லின்,*
*நீரோட்டங்களும்,*
*சித்திரமாய் பதிந்த திருப்பங்களும்*
*எல்லாம்,*
*உன்னைப் போல...*
*அந்தத் தாடிவாலாவைப் போல...*
*எங்கோ,*
*எங்கெங்கோ,*
*ஒன்றில் இருந்து ஒன்றாய்*
*மாறி மாறி*
*வளர்ந்து வளர்ந்து*
*உச்சங்களில் உயர உயர,*

*நானோ,*
*இன்னமும் இங்கேதான் குத்திக்கொண்டிருக்கிறேன் –*
*மத்தியப் பிரதேசப் புல் வெளியில்,*
*ஓடும் ரயிலைப் பார்த்தபடி*
*கம்பளியால் போர்த்திக் குந்திக் கொண்டிருந்த*
*அந்த நரைத்த தாடி ஆட்டிடையனைப் போல் –*

*ஒரு* Living fossile *ஆய்,*
*மரிக்காத உயிர்ச் சுவடாய்,*
Xiphonosuridae *ஆய்,*
*எந்த மாற்றமுமின்றி,*
*விலகிச் செல்லும் இந்த மையங்களைப் பார்த்தபடி.*

❖

***1986***

## நான்காம் இரவு ♦

சுந்தரா மாண்டு போனாய்
துயரினைத் தாங்கிக் கொண்டு
உந்தையும் தாயும் இன்று
ஊருக்கு மாற்று வைத்தார்
இன்று நாள் மூன்று, நீயும்
இல்லாமற் போனாய் என்று
வந்தது வானொலிச் செய்தி – உன்
வரலாறு முடிந்தாற் போல ...

இரவுகள் நான்கு – நாளை
இன்னொன்று வந்து சேரும்,
உருவிடும் பகல் போனாலும்
உறக்கமில்லாத இந்த
இரவுகள் மிகவும் வாட்டும்
இரைகின்ற கடலோ நெஞ்சில்
அடிப்பதைப் போல கேட்கும்
அடித்தது போதா தென்றே...

அடித்ததே கடலும் உன்னை,
அவசரம் என்ன? வயதோ
இருபத்தி மூன்று தானே –
இன்னுமோர் எழுபதாண்டு
பொறுத்திருந்தால் என்ன? பின்னர்
போகாயோ குளிப்பதற்கு!

*மடத்தனம் செய்தாள் மூதி*
*கடல்மடி! என்ன செய்வோம்!*

*கடலிலே என்ன ஆணாய்*
*கற்பனை கோடி தோன்றும்,*
*அடிமுடி அற்றுப்போன*
*அலையிலே அமுங்கும் போது*
*பிடிபட்டோம் என்று நெஞ்சம்*
*பிறங்கிற்றோ? பின்னர் இனி,*
*விடுபடோம் என்று தெய்வ*
*விதியினை நொந்திட்டாயோ!*

*இழுபட்டுப் போய்இருப்பாய் – கடல்*
*என்னென்ன செய்ததோ தான்*
*தலைகால் சுருள உன்னை*
*தனது மனம் போலக் கொஞ்சி*
*அலைகளால் ஏற்றி ஏற்றி*
*அகிலத்தின் எக்கரைக்கு*
*வழி சேர்த்தாளோ மூதி, தன்*
*மடியில் தான் புதைத் திட்டாளோ!*

*அழுகிறோம், இரவு நான்கு,*
*ஆயிரம் இரவுகள் இன்னும்*
*வழி பார்த்திருக்கும் இந்த*
*மாற்றுடன் முடிவதாமோ?*
*நிலவிலே, தென்னை மீது*
*நீள்கின்ற வாடைக் காற்றின்*
*ஒலியினை உற்றுக் கேட்பாய்*
*ஒரு நெஞ்சின் விம்மல் மிஞ்சும்.*

❖

***1982***